


# தமிழன்
THAMILAN தமிழன்

Follow us:

தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

மலர் : 02, இதழ் : 279 பிலவ வருடம், ஆடி மாதம் 01ஆம் திகதி சனிக்கிழமை (17.07.2021) ஹிஜ்ரி - 1442, துல்ஹஜ் பிறை - 06, 0115886187 - பக்கங்கள் 08

விலை ரூ.30

## மாகாணங்களுக்கிடையில் போக்குவரத்து நிறுத்தம்



மாகாணங்களுக்கிடையிலான பஸ், புகையிரதம் போன்ற பொது போக்குவரத்து சேவைகளை மீண்டும் இடைநிறுத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாக இராஜாங்க அமைச்சர் திலும் அமுனுகம தெரிவித்துள்ளார்.

02»

## துமிந்த நாகமுவ உட்பட அறுவர் விடுதலை



கொம்பனித்தெருவில் வைத்து கைதுசெய்யப்பட்டு தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டிருந்த முன்னிலை சோஷலிச கட்சி உறுப்பினரான துமிந்த நாகமுவ உள்ளிட்ட 6 பேர் நேற்று விடுதலைசெய்யப்பட்டுள்ளனர்.

தனிமைப்படுத்தல் சட்டத்தை மீறி கொம்பனித்தெருவில் ஆர்ப்பாட்டம் ஒன்றை மேற்கொண்ட காரணத்தினால் இவர்கள் கைதுசெய்யப்பட்டிருந்தனர்.

இதனையடுத்து குறித்த நபர்கள் கோட்டை நீதவான் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டபோது அவர்களுக்கு பிணை வழங்கப்பட்டிருந்தது.

இருப்பினும், சந்தேகநபர்களை 14 நாட்கள் தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்துமாறு நீதவான் உத்தரவிட்டிருந்தார். அதனடிப்படையில் 14 நாட்கள் தனிமைப்படுத்தலை நிறைவுசெய்து நேற்றைய தினம் இவர்கள் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

# மஹிந்த – மைத்ரி தீர்க்கமான சந்திப்பு



### அநீதிகள் தொடர்ந்தால் அரசிலிருந்து வெளியேறப்போவதாக சிறிசேன திட்டவட்ட அறிவிப்பு

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவுக்கும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவர், முன்னாள் ஜனாதிபதி மைத்ரிபால சிறிசேனவுக்குமிடையில் முக்கிய சந்திப்பொன்று நேற்றுமுன்தினம் அலரிமாளிகையில் இடம்பெற்றுள்ளது.

சுமார் ஒருமணிநேரம் நடந்த இந்தச் சந்திப்பில் மேற்படி இருவர் மட்டுமே கலந்துகொண்டனர்.

அரசுக்குள் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கு இழைக்கப்படும் அநீதிகளை பிரதமர் மஹிந்தவிடம் பட்டியலிட்ட முன்னாள் ஜனாதிபதி மைத்ரி, இந்த நிலைமை தொடருமானால் அரசில் தொடர்ந்தும் இருப்பதா இல்லையா என்பது குறித்து இறுதித் தீர்மானமொன்றை எடுக்கவேண்டி வருமென்று தெரிவித்தாரென அறியமுடிந்தது.

02»

## பவித்ராவும், அலைனாவும்...




கட்டார் விமான சேவைக்குச் சொந்தமான விமானத்தினூடாக அமெரிக்காவின் 1.5 மில்லியன் மொடர்னா தடுப்பூசிகள் கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்துக்கு நேற்று வந்தடைந்தன. இந்தத் தடுப்பூசிகளை பெற்றுக்கொள்வதற்காக சுகாதார அமைச்சர் பவித்ரா தேவி வன்னியாராச்சி மற்றும் அமெரிக்கத் தூதுவர் அலைனா பி.டெப்லிட்ஸ் ஆகியோர் விமான நிலையத்துக்கு சென்றிருந்தபோது எடுக்கப்பட்ட படம்.




உத்தேச கொத்தலாவல சட்டமூலத்துக்கு எதிர்ப்பு தெரிவித்தும் பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்தும் ஒன்றிணைந்த ஆசிரியர் சங்கங்கள் நுவரெலியா நகரில் நேற்று ஆர்ப்பாட்டமொன்றை முன்னெடுத்தனர். (படம் – டி.சந்ரு)

## கொரோனா கட்டுப்பாடுகளில் மேலும் சில புதிய தளர்வுகள்



நாட்டில் கொரோனா வைரஸ் பரவலைக் கருத்திற்கொண்டு அமுல்படுத்தப்பட்டுள்ள கட்டுப்பாடுகளை தளர்த்துவது தொடர்பில் சுகாதார அமைச்சு சில வழிகாட்டல்களை வெளியிட்டுள்ளது.

குறித்த சுகாதார வழிகாட்டல்கள் நேற்று முதல் நடைமுறைக்கு வரும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

அதன்படி, சுகாதார விதிமுறைகளுக்கமைய உள்ளக இசை நிகழ்ச்சிளை நடத்துவதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

02»

## இராணுவ முகாம்களில் தலைமைத்துவப் பயிற்சி

### இளைஞர்களுக்கு வழங்கப்படுமென அமைச்சர் சரத் வீரசேகர தகவல்



நாட்டிலுள்ள 18 வயதிற்கு மேற்பட்ட இளைஞர்களுக்கு இராணுவ முகாம்களில் தலைமைத்துவப் பயிற்சியை வழங்கவேண்டும் என பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் சரத் வீரசேகர தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் கூறியுள்ளதாவது,

இராணுவ முகாம்களில் பயிற்சி வழங்கப்படுவது இளைஞர்களை படைவீரர்களாக்கும் நடவடிக்கையில்லை.

02»

## தேர்தல் ஆணைக்குழுவின் உறுப்பினர்கள் இடமாற்றம்

### நாடாளுமன்ற விசேட அமர்வுக்கு ஐக்கிய மக்கள் சக்தி கோரிக்கை

தேர்தல் ஆணைக்குழுவின் அனுபவமிக்க உறுப்பினர்களை இடமாற்றியமை தொடர்பாக விவாதிப்பதற்கு விசேட நாடாளுமன்ற அமர்வை கூட்டுமாறு கோரி ஐக்கிய மக்கள் சக்தி, சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தனவுக்கு கடிதமொன்றை அனுப்பிவைத்துள்ளது.

அந்தக் கடிதத்தில் மேலும் கூறப்பட்டுள்ளதாவது,

இலங்கை ஜனநாயக சோஷலிச குடியரசின் அரசியலமைப்பின் பிரகாரம் ஸ்தாபிக்கப்பட்ட தேர்தல் ஆணைக்குழு ஒரு சுயாதீன அமைப்பாக அமைகிறது. அதன் அதிகாரிகளின் கடமைகளைச் செய்வதற்கான சுதந்திரத்தை அரசியலமைப்பு வழங்குகிறது.

02»

## 6 இலட்சத்திற்கும் மேற்பட்ட இலங்கையர் வெளிநாட்டு விஸாக்களுக்கு விண்ணப்பம்

### வஜிர அபேவர்தன அதிர்ச்சித் தகவல்



தற்போதைய அரசாங்கம் ஆட்சிக்கு வந்ததன் பின்னர் 6 இலட்சத்திற்கும் அதிகமான இலங்கையர்கள் நாட்டிலிருந்து வெளியேறிச் செல்வதற்காக விஸா அனுமதிப்பத்திரங்களுக்கு விண்ணப்பித்துள்ளதாக ஐக்கிய தேசியக் கட்சியின் தவிசாளரும் முன்னாள் அமைச்சருமான வஜிர அபேவர்தன தெரிவித்துள்ளார்.

இவர்களில் பெரும்பாலானவர்கள் சிங்கள பௌத்தர்களே என அவர் தெரிவித்ததோடு, சிறந்த கல்விமான்கள் இவ்வாறு நாட்டைவிட்டு வெளியேறிச் செல்வார்களாயின், நாட்டின் எதிர்காலம் பாரிய பின்னடைவை சந்திக்கும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

02»

## ரயில்வே கொத்தணி உருவாகும் அபாயம்

### கொரோனா எல்லை மீறுகிறது



ரயில்வே திணைக்களத்தில் கொவிட் நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதென ரயில்வே தொழிற்சங்கங்கள் எச்சரிக்கின்றன.

இந்நிலை காரணமாக ரயில் சேவைகளும் பாதிக்கப்பட்டுள்ளதாக ரயில்வே சாரதிகள் சங்கத்தின் செயலாளர் இந்திக்க தொடங்கொட தெரிவித்தார்.

மினுவாங்கொட ஆடைத் தொழிற்சாலை மற்றும் பேலியகொட மீன் சந்தைக் கொத்தணி போன்றே கொவிட் கொத்தணி இன்று ரயில்வே திணைக்களத்தில் உருவாகி வருகிறது என அவர் கூறினார்.

“இப்போது ரயில் கொத்தணி அபாயம் உருவாகியுள்ளது. 20 முதல் 25 ரயில் சேவைகள் இடைநிறுத்தப்பட்டுள்ளன. பயணிகளுக்கும் அபாயம் உள்ளது. ஏனெனில், ரயில்கள் பயணிகளால் நிறைந்துள்ளன. உடனடி நடவடிக்கை எடுக்காதுவிட்டால் ரயில்களில் வைரஸ் பரவும் அபாயமுள்ளது” என அவர் மேலும் தெரிவித்தார்.



# வடக்கு – கிழக்கிற்கு சீனத் தடுப்பூசிகள்

### கோட்டாவின் கோரிக்கையையடுத்து 16 இலட்சத்தை அனுப்புகிறது பீஜிங்

கொரோனா வைரஸ் தொற்றிலிருந்து மக்களை பாதுகாக்கும் வகையில் உடனடித் தேவைக்காக வடக்கு, கிழக்கு மாகாணங்களின் மக்களுக்கு சினோபார்ம் தடுப்பூசியை அடுத்தவாரம் அனுப்புகிறது சீன அரசு.

இலங்கைக்கான சீனத் தூதுவரிடம் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ விடுத்த நேரடி வேண்டுகோளையடுத்து வடக்கு, கிழக்கு மாகாணங்களில் அவசர தேவையுடையோருக்கு சுமார் 16 இலட்சம் சினோபார்ம் தடுப்பூசிகளை வழங்க சீன அரசு முன்வந்துள்ளது.

02»

# நோய்வாய்ப்பட்டவர்களுக்காக விசேட நடமாடும் தடுப்பூசி சேவை

## விரைவாக ஆரம்பிக்குமாறு அதிகாரிகளுக்கு ஜனாதிபதி பணிப்பு

நோய்வாய்ப்பட்டு, வீடுகளைவிட்டு வெளிச்செல்ல முடியாதிருப்பவர்களுக்கு நடமாடும் தடுப்பூசி ஏற்றும் சேவையை விரைவாக ஆரம்பிக்குமாறு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ அதிகாரிகளுக்குப் பணிப்புரை விடுதுதுள்ளார்.

நாடளாவிய ரீதியில், மாவட்ட மட்டத்தில் தடுப்பூசி ஏற்றும் நடவடிக்கைகள் விரைவுபடுத்தப்பட்டுள்ளன. எனினும், நோய்வாய்ப்பட்டு, வீடுகளைவிட்டு வெளிச்செல்ல முடியாதிருப்பவர்களுக்குத் தடுப்பூசி ஏற்றுவது சிக்கலாக உள்ளது. சுகாதார மருத்துவ அதிகாரிகள், பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களின் உதவியுடன் அல்லது விசேட தொலைபேசி இலக்கங்களின் ஊடாக தகவல்களைப் பெற்று, நடமாடும் தடுப்பூசி ஏற்றும் வேலைத்திட்டத்தை விரைவாக ஆரம்பிக்கவேண்டுமென்றும் ஜனாதிபதி வலியுறுத்தியுள்ளார்.

தடுப்பூசி ஏற்றுதல் மற்றும் எதிர்காலச் செயற்பாடுகள் தொடர்பில் கொவிட் ஒழிப்பு விசேட குழுவுடன் நேற்று ஜனாதிபதி அலுவலகத்தில் இடம்பெற்ற கலந்துரையாடலின் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.



கடந்த சில நாட்களாக இனங்காணப்பட்டுள்ள கொரோனா நோயாளர்கள் மற்றும் உயிரிழந்தவர்களில் அதிக சதவீதமானோர், தடுப்பூசி பெற்றுக்கொள்ளாதவர்கள் எனத் தெரியவந்துள்ளது. எனவே, தடுப்பூசி ஏற்றுவதன் முக்கியத்துவம் குறித்தும் அது தொடர்பில் அறிவூட்டுவது குறித்தும் தடுப்பூசி ஏற்றும் நிகழ்ச்சித்திட்டத்துக்கு மக்களை உட்படுத்துவது அவசியம்.

பாடசாலைகள் ஆரம்பிக்கப்பட்டதன் பின்னர், மாணவர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் நோய் எதிர்ப்புச்சக்தியை அதிகரிப்பதற்காக சுதேச ஔடதங்களை வழங்கவேண்டியதும் அவசியமாகும் என்று சுட்டிக்காட்டியுள்ளார்.

கம்பஹா மற்றும் களுத்துறை மாவட்டங்களிலுள்ள 30 வயதுக்கும் மேற்பட்ட அனைவருக்கும், எதிர்வரும் நான்கு நாட்களுக்குள் தடுப்பூசி ஏற்றமுடியுமென அமைச்சர்களான பிரசன்ன ரணதுங்க மற்றும் ரோஹித்த அபேகுணவர்தன ஆகியோர் எடுத்துரைத்துள்ளனர்.

முதலீட்டு ஊக்குவிப்பு, சுற்றுலாத்துறையுடன் தொடர்புடைய வலயங்களில் தடுப்பூசி ஏற்றும் நடவடிக்கைகள் 90 சதவீதமளவில் நிறைவடைந்துள்ளன. எனவே, குறித்த துறைகளில் விசேடமான எழுச்சியைக் காணமுடியுமென அமைச்சர் நாமல் ராஜபக்ஷ இதன்போது தெரிவித்துள்ளார்.

இதேவளை, எந்தவொரு துறையிலும் தொழிலில் ஈடுபட்டுள்ள ஒருவருக்கு தடுப்பூசி ஏற்றும் எந்தவோர் இடத்திலும், இலகுவாகத் தடுப்பூசியைப் பெற்றுக்கொள்வதற்கான சந்தர்ப்பத்தை ஏற்படுத்திக்கொடுக்குமாறு, ஜனாதிபதி பணிப்புரை விடுதுதுள்ளார்.

ஆயுர்வேத மத்திய நிலையங்களில் கொவிட் நோயாளிகளுக்கு வெற்றிகரமாக சிகிச்சையளிக்க முடிந்துள்ளதாக சுதேச மருத்துவத்துறை ஊக்குவிப்பு இராஜாங்க அமைச்சர் சிசிர ஜயக்கொடி தெரிவித்தார். இங்கு சிகிச்சைபெற்ற எவரும் மரணமடையவில்லை என்பதுடன், விரைவாகக் குணமடைந்திருப்பது பற்றிய விசேட ஆராய்ச்சியை மேற்கொள்ளவேண்டியதன் அவசியத்தை அமைச்சர் ரமேஷ் பத்திரன எடுத்துரைத்துள்ளார்.

அமைச்சர்களான பவித்ரா வன்னியாரச்சி, பந்துல குணவர்தன, ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ, ரமேஷ் பத்திரன, ரோஹித்த அபேகுணவர்தன, கெஹேலிய ரம்புக்வெல்ல, மஹிந்தானந்த அளுத்கமகே, நாமல் ராஜபக்ஷ, பிரசன்ன ரணதுங்க, இராஜாங்க அமைச்சர்களான சுதர்ஷனி பெர்னாண்டோபுள்ளே. திலும் அமுனுகம, சிசிர ஜயக்கொடி, சன்ன ஜயசுமன, நாடாளுமன்ற உறுப்பினர் மதுர வித்தானகே, ஜனாதிபதியின் தலைமை ஆலோசகர் லலித் வீரதுங்க, சுகாதார அமைச்சின் செயலாளர் மேஜர் ஜெனரல் விசேட வைத்தியர் சஞ்ஜீவ முனசிங்க ஆகியோரும் முப்படைத் தளபதிகள், பொலிஸ் மா அதிபர் மற்றும் சுகாதார அதிகாரிகள் ஆகியோர் இந்த நிகழ்வில் கலந்துகொண்டிருந்தனர்.

# கொரோனா தடுப்பூசி வழங்குவதில் கல்முனை பிராந்தியம் புறக்கணிப்பு

## நாடாளுமன்ற உறுப்பினர் கலையரசன் அங்கலாய்ப்பு

(வீரமுனை நிருபர்)

இலங்கையில் இருக்கின்ற 26 சுகாதார சேவைகள் பணிமனையில் கல்முனை பிராந்தியத்திற்கு மாத்திரம் கொரோனா தடுப்பூசி வழங்கப்படாமல் புறக்கணிக்கப்பட்டுள்ளது - என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அம்பாறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் த.கலையரசன் தெரிவித்தார்.

கொரோனா தடுப்பூசி வழங்கலில் கல்முனை பிராந்தியம் புறக்கணிக்கப்படுகிறதா என வினவியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில்,

இலங்கையில் அனைத்து இடங்களுக்கும் கொரோனா தடுப்பூசி ஏற்றப்பட்டுள்ள இறுதி நிலையில், இலங்கையின் கல்முனை பிராந்தியத்திற்கு மாத்திரம் கொரோனா தடுப்பு மருந்து வழங்கப்படாமல் இருப்பதென்பது கல்முனையில் வாழும் மூவின மக்களையும் பாதிக்கிற விடயமாக இருக்கிறது. அந்தவகையில் தடுப்பூசி விவகாரத்தில் அரசாங்கம் கூடிய கவனம் செலுத்தவேண்டிய தேவையுள்ளது.

கல்முனை பிராந்திய சுகாதாரப் பணிமனையில் பணிபுரிகின்ற பணிப்பாளர் உட்பட அனைத்து அதிகாரிகளும் கடந்த காலத்தில் அயராது செயற்பட்டு, ஏனைய பிராந்தியங்களிலிருந்து கல்முனை பிராந்தியத்தை முற்றுமுழுதாக கொரோனா தொற்றுப் பரவலிலிருந்து கட்டுப்படுத்தியிருந்தனர். அந்தவகையில் அந்த அதிகாரிகளின் சேவைகள் பாராட்டப்பட வேண்டும்.



இருந்தும், பெரியநீலாவணை தொடக்கம் பொத்துவில் வரையான கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனைப் பிரிவுகளில் கொரோனா தொற்றின் தாக்கம் நாளுக்கு நாள் அதிகரித்துவரும் நிலையில், கடந்த இரு வாரங்களாக தடுப்பூசிகள் கிடைக்க இருக்கின்றன என்ற செய்தித் தகவல்கள் மாத்திரம் வெளிவருகின்றனவே தவிர, இற்றைவரை தடுப்பூசிகள் கிடைத்தபாடில்லை. கொரோனா தடுப்பூசி தாமதமாவதற்கான பின்னணி கண்டறியப்பட வேண்டும்.

கடந்த ஜூன் மாத முற்பகுதியில் கிழக்கு மாகாணத்தின் மூன்று மாவட்டங்களுக்கும் தலா 25,000 சினோபார்ம் தடுப்பூசிகள் வழங்கப்பட்டபோதிலும், அம்பாறை மாவட்ட கல்முனை பிராந்தியம் உள்வாங்கப்படாமல் முற்றாக புறக்கணிக்கப்பட்டதுபோல் மேலும் புறக்கணிக்கப்படுமா என பொதுமக்கள் அங்கலாய்க்கின்றனர்.

60 வயதிற்கு மேற்பட்டவர்களுக்கு தடுப்பூசி ஏற்றுவது தொடர்பான அரச வேலைத்திட்டம் கல்முனையில் எப்பொழுது நடைமுறைப்படுத்தப்படும் என்ற அங்கலாய்ப்பில் பொதுமக்கள் இருப்பதனால் சுகாதார அமைச்சர், கொரோனா தடுப்புமருந்தை விரைவாக கல்முனை பிராந்தியத்திற்கு வழங்குவதற்குரிய ஏற்பாட்டு நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும் - என்றார்.

# பசறை - கோணக்கலை தோட்டத்தில் 92 குடும்பங்கள் தனிமைப்படுத்தல்

(பசறை நிருபர்)

அதிகளவான கொரோனா நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டதையடுத்து பசறை பிரதேசத்திற்குட்பட்ட கோணக்கலை தோட்டம், பிளார்னிவத்த பிரிவில் 92 குடும்பங்கள் மீள் அறிவித்தல்வரை தனிமைப்படுத்தப்பட்டுள்ளதாக சுகாதார பிரிவினர் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

இதுதொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

கடந்த நாட்களில் இந்தத் தோட்டத்தில் 73 பேருக்கு மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனையில் 41 பேருக்கு கொரோனா தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

அதனையடுத்து, சுகாதார பாதுகாப்புக் கருதி நேற்றுமுதல் பசறை பொதுச் சுகாதார பரிசோதகர்கள் மற்றும் பசறை பொலிஸார் இணைந்து குறித்த பகுதியை உடன் அமுலாகும் வகையில் தனிமைப்படுத்தப்பட்ட நடவடிக்கை எடுத்துள்ளனர்.

பசறை பிரதேசத்தில் கடந்த சில நாட்களாக தொற்றாளர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருகின்றமையால் பொதுமக்கள் சுகாதார நடைமுறைகளை பேணுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

# முல்லைத்தீவு வைத்தியசாலைக்கு நோய்நிலை கண்காணிப்பு இயந்திரம் கையளிப்பு

(மன்னார் நகர் நிருபர்)

முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலைக்கு சுமார் 21 இலட்சம் ரூபா பெறுமதியான நோய்நிலை கண்காணிப்பு மற்றும் கிருமிநீக்கும் இயந்திரங்கள் மன்னார் மாவட்ட சமூக பொருளாதார மேம்பாட்டுக்கான நிறுவனத்தினால் வைபவ ரீதியாக கையளிக்கப்பட்டது.




நாட்டில் அதிகரித்துவரும் கொரோனா தொற்றினால் பாதிக்கப்படும் நோயாளிகளை நோய்த் தொற்றிலிருந்து பாதுகாப்பதற்காக முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபரின் கோரிக்கைக்கமைவாக 21 இலட்சத்து 42 ஆயிரத்து 500 ரூபா பெறுமதியான நோய்நிலை கண்காணிப்பு இயந்திரம் மற்றும் கிருமிநீக்கும் இயந்திரங்கள் முல்லைத்தீவு சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் உமாசங்கரிடம் முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலையில் வைத்து மன்னார் சமூக பொருளாதார மேம்பாட்டுக்கான நிறுவனத்தின் பணிப்பாளர் யாட்சன் பிகிராடோ கையளித்தார்.

இந்நிகழ்வில் முல்லைத்தீவு மாவட்ட செயலகத்தின் பிரதம கணக்காளர் ஜேசு ரெஜினோல்ட், முல்லைத்தீவு மாவட்ட உதவி பிரதேச செயலாளர் திருமதி எல்.கேகிதா, வைத்திய அதிகாரிகளான வைத்தியர் சோபன், வைத்தியர் விதுரன் மற்றும் மன்னார் சமூக பொருளாதார மேம்பாட்டுக்கான நிறுவனத்தின் பணியாளர்களும் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# ஜோசப் ஸ்டாலின் உட்பட 16 பேர் விடுவிப்பு



இலங்கை ஆசிரியர் சங்க பொதுச்செயலாளர் ஜோசப் ஸ்டாலின் மற்றும் 16 பேர் முல்லைத்தீவு விமானப் படை தனிமைப்படுத்தல் மையத்தில் இருந்து விடுவிக்கப்பட்டுள்ளனர்.

கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகம் தொடர்பான புதிய சட்டத்திருத்த யோசனைக்கு எதிர்ப்புத் தெரிவித்தும், உயர் கல்வித் துறை இராணுவ மயமாக்கப்படுவதை கண்டித்தும் நாடாளுமன்ற வளாகத்தில் அண்மையில் இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் ஜோசப் ஸ்டாலின் உள்ளிட்ட 33 பேர் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்தனர். இந்த சந்தர்ப்பத்தில் அவர்கள் கைது செய்யப்பட்ட நிலையில் கொழும்பு மேலதிக நீதிவான் முன்னிலையில் ஆஜர்செய்யப்பட்டு 25 ஆயிரம் ரூபா சரீரப் பிணையில் விடுவிக்கப்பட்ட நிலையில் முல்லைத்தீவு விமானப்படை தனிமைப்படுத்தல் மையத்துக்கு தனிமைப் படுத்தலுக்காக அனுப்பி வைக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

### 6 இலட்சத்துக்கும்...

கடந்த காலங்களுடன் ஒப்பிடும்போது தற்போது விஸா அனுமதிப்பத்திரங்களுக்காக விண்ணப்பித்த எண்ணிக்கை பாரியளவில் அதிகரித்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இவ்வாறு விண்ணப்பத்தவர்களில் அதிகளவானோர் ஐரோப்பிய நாடுகள், அமெரிக்கா, அவுஸ்திரேலியா மற்றும் கனடா ஆகிய நாடுகளுக்கு விண்ணப்பித்துள்ளதையும் முன்னாள் அமைச்சர் வஜிர அபேவர்தன மேலும் தெரிவித்தார்.

இலங்கையின் பொருளாதார பின்னடைவு, நாட்டை நிலையாக வைத்திருப்பதில் அரசாங்கத்தின் இயலாமை ஆகிய காரணிகளை அடிப்படையாகக்கொண்டே குறித்த நபர்கள் நாட்டைவிட்டு வெளியேறுவதற்கு தீர்மானித்துள்ளதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

### இராணுவ முகாம்களில்...

இவ்வாறான பயிற்சி சமூகத்தில் ஒழுக்கத்தைப் பேணுவதற்கு உதவும். நாட்டில் ஒழுக்கநெறியில் பாரிய வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது. சந்தேகம் அல்லது அச்சமின்றி வாழவேண்டுமென்றால் சமூகத்தில் மோசடிக்காரர்கள், பாலியல் துஷ்பிரயோகங்களில் ஈடுபடுபவர்கள் இல்லாநிலை ஏற்படவேண்டும்.

குழந்தையொன்று காணாமல்போனால், நாட்டின் சூழ்நிலை காரணமாக குழந்தையின் எதிர்காலத்தை உறுதிசெய்ய முடியாத நிலை காணப்படுகின்றது. 18 வயதிற்கு மேற்பட்ட இளைஞர்களுக்கு இராணுவப் பயிற்சி குறித்த யோசனையை நான் நாடாளுமன்றத்தில் முன்வைத்தவேளை என்னை கடுமையாக விமர்சித்தனர் - எனவும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

### வடக்கு, கிழக்கிற்கு...

பெரும்பாலும் இந்தத் தடுப்பூசிகளை மானியமாக வழங்குவதற்கு சீன அரசு ஆலோசித்துவருவதாக சொல்லப்படுகிறது.

ஏற்கனவே வடக்கு, கிழக்கு மாகாணங்களின் சீன முதலீடுகள் சர்ச்சைகளை ஏற்படுத்தியுள்ள சூழ்நிலையில், அந்த மாகாண மக்களுக்கான தடுப்பூசிகளை வழங்க சீனா முன்வந்திருப்பது அரசியல் வட்டாரங்களில் பரபரப்பாக பேசப்படுகிறது.

### மஹிந்த - மைத்ரி...

எவ்வாறாயினும் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுடன் எதிர்வரும் 21ஆம் திகதி நடக்கவுள்ள சந்திப்பின்போது ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி எதிர்நோக்கும் உள்ளக பிரச்சினைகளை ஆராய்ந்து அவற்றிற்கு தீர்வை காண்பதென இந்தச் சந்திப்பில் தீர்மானிக்கப்பட்டது.

### மாகாணங்களுக்கிடையில்...

அதன்படி, இன்று முதல் ஒக்ஸ்ட் முதலாம் திகதிவரை பொது போக்குவரத்து சேவைகள் இடம்பெறாது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

தற்போதைய கொவிட் நிலைமையை கருத்திற் கொண்டே இந்த நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டுள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

### கொரோனா கட்டுப்பாடுகளில்...

நாட்டில் அமுல்படுத்தப்பட்டுள்ள தனிமைப் படுத்தல் சட்டவிதிமுறைகளின் பிரகாரம் இந்த அனுமதி வழங்கப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது.

இதற்கமைய, மண்டபத்தில் 50 வீதமானவர்களின் பங்குபற்றுதலுடன் இசைநிகழ்ச்சிகளை நடத்துவதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

அத்துடன், பொது இடங்களில் இசை நிகழ்ச்சிகளை நடத்துவதற்கு அனுமதி மறுக்கப் பட்டுள்ளது.

அதனடிப்படையில் நேற்றுமுதல் மத வழிப்பாட்டுத்தலங்களை திறந்துவைப்பதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளதுடன், மதம் சார்ந்த நிகழ்வுகளை நடத்துவதற்கான வழிகாட்டல்கள் வெவ்வேறாக வழங்கப்பட்டுள்ளது.

சிறுவர் பூங்காக்கள், விலங்குகள் சரணாலயங்களை திறப்பதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளதுடன், மிருகக்காட்சிச் சாலைகளை பார்வையிட ஒரு தடவையில் 25 வீதமானவர்களுக்கே அனுமதி யளிக்கப்பட்டுள்ளது.

### நாடாளுமன்ற விசேட...

மேலும், தேர்தல் ஆணைக்குழுவில் ஆட்சேர்ப்பு மற்றும் இடமாற்றங்கள் சாதாரண பொதுச் சேவை விதிமுறைகளுக்கு அப்பாற்பட்டவை. முக்கிய நோக்கம், அதிகாரிகள் தங்கள் கடமைகளை சுயாதீனமாகச் செய்வதற்கு உகந்த சூழலை உருவாக்குவதோடு, தேர்தல் துறைக்குள்ளேயே அல்லது ஆணைக்குழுவினுள் தேர்தல்களை நடத்துவதற்கான சிறப்புகளையும் அனுபவத்தையும் தக்கவைத்துக்கொள்வதாகும்.

இருப்பினும், கடந்த சில மாதங்களாக தேர்தல் ஆணைக்குழுவில் பணிபுரியும் அனுபவமுள்ள பல அதிகாரிகள் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இவ்வளவு குறுகிய காலத்தில் அதிக எண்ணிக்கையிலான அனுபவம்வாய்ந்த அதிகாரிகளை தேர்தல் ஆணைக்குழுவிலிருந்து நீக்குவது வரவிருக்கும் தேர்தல் பிரசாரங்களையும், குறிப்பாக பாதிக்கப்படக்கூடிய புதிய அரசியல் ரீதியான அதிகாரிகளை நியமிப்பதன்மூலம் சுதந்திரமான மற்றும் நியாயமான தேர்தல்களை நடத்துவதற்கான வாய்ப்பைத் தடுக்கும்.

நாடாளுமன்ற உறுப்பினர்கள் என்றவகையில், ஜனநாயகம் மற்றும் இறையாண்மையின் மீது ஏற்படக்கூடிய பாதகமான விளைவுகளைத் தடுக்க அவசர நடவடிக்கை எடுக்கப்படவேண்டும் என்பதால், மக்களுக்கு பொறுப்புக்கூறும் நாடாளுமன்றம் கூடி, சுயாதீன ஆணைக்குழுக்களை நியமிப்பது குறித்து விவாதிக்கவேண்டும் என்று நாங்கள் கருதுகிறோம். அதன்படி, தேர்தல் ஆணைக்குழுவில் அனுபவம்வாய்ந்த பல அதிகாரிகளை குறுகிய காலத்திற்குள் மாற்றுவது குறித்து விவாதிக்கவும் முடிவெடுக்கவும் விரைவில் நாடாளுமன்றத்தின் சிறப்பு அமர்வை கூட்டுமாறு தயவுசெய்து கேட்டுக்கொள்கிறோம்.

- இவ்வாறு அந்தக் கடிதத்தில் கூறப்பட்டுள்ளது.

# 10 வயதிலேயே தந்தையால் துஷ்பிரயோகம்; 13 வயது சிறுமியின் கண்ணீர் வாக்குமூலம்



நாவலப்பிட்டி ஹரங்கல இதுக்தென்ன எனுமிடத்தைச் சேர்ந்த 13 வயதும் 10 மாதங்களேயான பாடசாலைக்குச் செல்லும் சிறுமியை பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தியதாகக் கூறப்படும் ஐவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அதில், அச்சிறுமியின் தந்தை, சிறுமிக்கு 10 வயதானபோது துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தியுள்ளார் என விசாரணைகளிலிருந்து கண்டறியப்பட்டுள்ளது. கைதுசெய்யப்பட்ட ஐவரில், அவருடைய காதலனான 32 வயதான நபரும், அத்துடன் பெண்ணொருவரும் அடங்குகின்றனர் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

தன்னுடைய மகளை, கடந்த முதலாம் திகதிமுதல் காணவில்லையென அவருடைய தாய் நாவலப்பிட்டி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடொன்றை செய்துள்ளார். இந்நிலையில், காணவில்லையென தெரிவிக்கப்பட்ட அந்த சிறுமியை சிறுமியின் உறவினர்கள் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைத்துள்ளனர்.

இதன்பின்னர், வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட அச்சிறுமியிடம் மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையின் போதே, அச்சிறுமி துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தப்பட்டுள்ளமை தெரியவந்துள்ளது.

"என்னுடைய தந்தையால் 10 வயதில் நான் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தப்பட்டேன். அதன்பின்னர், என்னுடைய காதலன் துஷ்பியோகம் செய்தார். இந்நிலையில், ஹரங்கல பிரதேசத்திலுள்ள கற்குகைக்கு காதலன் அழைத்துச் சென்றார். மேலும் அங்கு தடுத்துவைத்து இன்னும் சிலர் என்னை துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தினர்" என பொலிஸில் வாக்குமூலமளித்துள்ளார்.

சிறுமியின் தந்தையும், காதலனும் பிரதான சந்தேகநபர்கள் எனத் தெரிவித்த பிரதி பொலிஸ் மா அதிபர் அஜித் ரோஹண, ஏனையோர் பாலியல் வன்புணர்வுக்கு ஒத்துழைப்பு நல்கினர் என்ற குற்றச்சாட்டின்கீழ் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

அந்த ஐந்து பேரும் நாவலப்பிட்டி நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்டு, விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். அத்துடன், இந்தச் சம்பவத்துடன் மேலும் ஆறு பேருக்கு தொடர்புள்ளதாக விசாரணையில் தெரியவந்துள்ளதாகவும் அவர்களையும் கைதுசெய்யும் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் பொலிஸ் பேச்சாளர் கூறினார்.

# வவுனியா கிராம அலுவலர் மீது தாக்குதல்; காயத்துடன் வைத்தியசாலையில் அனுமதி



(வவுனியா நிருபர்)

வவுனியாவில் கிராம அலுவலர் ஒருவர் மீது நபர் ஒருவர் தாக்குதல் நடத்தியதில் காயமடைந்த கிராம அலுவலர் வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

வவுனியா- தாண்டிக்குளம் ஏ-9 வீதியில் அரசாங்கத்திற்கு சொந்தமான காணியில் சிலர் அனுமதியின்றி சுற்றுவேலி அமைத்து வியாபார நிலையங்களை அமைத்திருந்தனர். குறித்த காணியில் சௌபாக்கியா திட்டத்தின் கீழ் விற்பனை நிலையம் ஒன்றை அமைப்பதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்தது.

இந்நிலையில், குறித்த விடயம் தொடர்பில் கடந்த 9ஆம் திகதி வவுனியா பிரதேச செயலாளர் தலைமையிலான குழுவினர் குறித்த இடத்திற்கு சென்று அனுமதியற்று கட்டப்பட்ட வியாபார நிலையங்களை அகற்றியிருந்தனர்.

இந்நிலையில், குறித்த சம்பவத்தினை சுட்டிக்காட்டி தாண்டிக்குளம் பிரிவின் கிராம அலுவலர் மீது நேற்று முன்தினம் நபர் ஒருவர் தாக்குதல் மேற்கொண்டுள்ளார். தாக்குதலில் காயமடைந்த கிராம அலுவலர் வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதுடன், இச்சம்பவம் தொடர்பில் கிராம அலுவலரினால் வவுனியா பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு மேற்கொள்ளப்பட்டது.

இதனையடுத்து கிராம அலுவலர் மீது தாக்குதல் மேற்கொண்ட நபரை பொலிஸார் கைதுசெய்து மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

# கொரோனாவால் இலங்கையில் குழந்தை பிறப்பு வீதம் வீழ்ச்சி

கொரோனா தொற்று காரணமாக இலங்கையில் குழந்தை பிறப்பு விகிதம் பாரியளவில் வீழ்ச்சியடைந்துள்ளதாக இராஜாங்க அமைச்சர் சிசிர ஜயகொடி தெரிவித்துள்ளார்.

பயணக் கட்டுப்பாடு காரணமாக திருமண வைபவங்கள் நடக்காத காரணத்தினால் இந்த நிலைமை ஏற்பட்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

இலங்கையில் வருடம் ஒன்றிற்கு 3 இலட்சத்து 50 ஆயிரம் குழந்தை பிறப்புகள் பதிவாவதாக அவர் தெரிவித்துள்ளார்.

கொரோனா தொற்று காரணமாக 3 ஆயிரத்து 500 பேர் உயிரிழந்துள்ளபோதிலும் 3 இலட்சத்து 50 ஆயிரம் குழந்தைகள் பிறக்கும் எண்ணிக்கை குறைந்துள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்

# 15 வயது சிறுமி விற்ற விவகாரம் ஐக்கிய மகளிர் சக்தி முறைப்பாடு



இணையத்தில் 15 வயது பெண் குழந்தை விற்கப்பட்டமை தொடர்பில் பாரபட்சமற்ற விசாரணையை வலியுறுத்தி ஐக்கிய மகளிர் சக்தி நேற்று முறைப்பாடொன்றை முன்வைத்தனர்.

ஐக்கிய மக்கள் சக்தியின் பிரதி செயலாளரும், ஐக்கிய மகளிர் சக்தியின் பிரதித் தலைவருமான உமாசந்திரா பிரகாஷ், ஐக்கிய மகளிர் சக்தியின் செயலாளர் நிரூபா உட்பட சட்டத்தரணிகள் குழுவினர் நேற்று நண்பகல் முக்தார் பிளாசாவில் அமைந்துள்ள இலங்கைப் பொலிஸின் பொலிஸ் சிறுவர் மற்றும் பெண்கள் பணியகத்திற்கு சென்று குறித்த முறைப்பாட்டை கையளித்தனர்.

# ஜுன் வரை 137 மில்லியன் கிலோ தேயிலை ஏற்றுமதி

நாட்டின் தேயிலை ஏற்றுமதி வருவாயானது வருடத்தின் அரையாண்டு காலப்பகுதியில் 14 சதவீதத்தினால் அதிகரித்துள்ளது.

இதன்மூலம் 650 மில்லியன் அமெரிக்க டொலர் வருமானமாக ஈட்டப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த காலப்பகுதியில், வெளிநாடுகளுக்கு 137 மில்லியன் கிலோகிராம் தேயிலை ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளது. அது 10 சதவீதத்தினால் அதிகரித்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த வருடத்தின் முதல் ஆறு மாத காலப்பகுதியில், ஜூன் மாதத்தில் மாத்திரம் 30 மில்லியன் கிலோகிராம் தேயிலை ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளது.

இது கடந்த 5 ஆண்டுகளில் ஏற்றுமதி செய்யப்பட்ட தேயிலையின் அதிகூடிய அலகாக பதிவாகியுள்ளது

# பலாங்கொடையில் கஞ்சாவுடன் மூவர் கைது





(மஹிந்த குமார்)

பலாங்கொடையில் 125 கிராம் கஞ்சாவுடன் மூன்று சந்தேகநபர்களை பலாங்கொடை பின்னவல பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.

பொலிஸ் நிலைய அதிகாரிகளுக்கு கிடைத்த இரகசியத் தகவலுக்கமைய பின்னவல பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரியின் பணிப்பில் நேற்று முன்தினம் பலாங்கொடை இம்புல்பே பிரதேசத்திற்கு சோதனைக்கு சென்றபோதே சந்தேகநபர்களை பின்னவல பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.

சந்தேகநபர்கள் நேற்று பலாங்கொடை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டுள்ளதாக தெரிவித்தனர்.

# திருத்தங்களுடன் கொத்தலாவல சட்டமூலம் நிறைவேற்றப்படும்

## அமைச்சர் விமல் வீரவன்ச திட்டவட்டம்

கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழக சட்டமூலத்தை திருத்தங்களுடன் நிறைவேற்ற எதிர்பார்த்துள்ளோம் - என கைத்தொழில் வளங்கள் அமைச்சர் விமல் வீரவன்ச தெரிவித்தார்.

கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழக சட்டமூலம் குறித்து ஆளுந்தரப்பின் மத்தியிலும் முரண்பாடுகள் காணப்படுகின்றதாகவும் அவர் குறிப்பிட்டார்.

அம்பாறையில் இடம்பெற்ற நிகழ்வின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழக சட்டமூலம் கடந்த 8ஆம் திகதி நாடாளுமன்றில் சமர்ப்பிக்கப்பட்டது. இது தொடர்பில் ஆளுந்தரப்பின் உறுப்பினர்களுக்கு மத்தியிலும் எழுந்த எதிர்ப்பின் காரணமாக இச்சட்டமூலத்தை நிறைவேற்றல் பிற்போடப்பட்டுள்ளது - என்றார்.

இதேவேளை, குறித்த சட்ட மூலத்திற்கு எதிர்ப்புத் தெரிவித்து ஆசிரியர் சங்கத்தால் போராட்டம் எடுக்கப்பட்டு, கைதுகள் பல இடம்பெற்ற நிலையில் பல சர்ச்சைகளை ஏற்படுத்தியுள்ளது.

இதேவேளை, குறித்த சட்ட மூலத்திற்கும், கைதுகளுக்கும் எதிர்ப்புத் தெரிவித்து ஒட்டுமொத்த ஆசிரியர்களும் இணையவழி கற்கைகளிலிருந்து விலகியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# மூன்றாண்டுகளாக சேதமடைந்துள்ள மதகு; ஓட்டமாவடி பிரதேச மக்கள் அசௌகரியம்





(எஸ்.எம்.எம்.முர்ஷித்)

கோறளைப்பற்று மத்தி பிரதேச செயலகப் பிரிவிற்கும் ஓட்டமாவடி பிரதேச சபை எல்லைக்குட்பட்ட அறபா நகர் ஜும்ஆ பள்ளிவாசல் வீதியில் கடந்த 2018ஆம் ஆண்டு ஏற்பட்ட வெள்ள அனர்த்தத்தினால் சேதமடைந்து காணப்படும் பிரதான மதகு இதுவரை திருத்தம் செய்யப்படாமை தொடர்பில் பிரதேச மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

சுமார் கடந்த மூன்றாண்டுகளாக சேதமடைந்த நிலையில் காணப்படும் இம்மதகினால் இப்பிரதேச மக்கள் பல்வேறு அசௌகரியங்களை எதிர்கொண்டு வருவதுடன், நோயாளிகளும் வயோதிபர்களும் பாதிப்புகளை எதிர்கொள்கின்றனர்.

அத்தோடு, இப்பிரதேசத்தின் பிரதான பாதையில் அமைந்திருப்பதன் காரணமாக இப்பாதையில் பயணிக்கும் முச்சக்கர வண்டிகள், மோட்டார் சைக்கிளில் பயணிப்போரும் விபத்துகளை எதிர்கொள்கின்றனர்.

இது விடயம் தொடர்பில் சம்பந்தப்பட்ட பிரதேச சபை, பிரதேச செயலகம் மற்றும் பலரை தொடர்புகொண்டும் எந்தவித நடவடிக்கையும் எடுக்கப்படாமல் புறக்கணிப்புச் செய்யப்பட்டு வருகின்றமை கவலையளிப்பதாக மக்கள் தெரிவிக்கின்றனர்.

இது தொடர்பில் ஓட்டமாவடி பிரதேச சபையில் குறித்த வட்டாரத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் பிரதேச சபை உறுப்பினர் ஏ.ஜி.அஸீஸுல் றஹீமை தொடர்புகொண்டு கேட்டபோது,

குறித்த மதகு சேதமடைந்துள்ளமை தொடர்பில் பிரதேச சபை அமர்வுகளின்போது கவனத்திற்கொண்டு வந்து தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்ட போதும், பிரதேச அபிவிருத்திக் குழுக்கூட்டங்களின்போது கோரிக்கை விடுத்தும் ஊடகங்களில் செய்தி வெளியிட்டபோதும், அதிகாரமுள்ள எந்தத் தரப்பினரும் கண்டுகொள்ளாமை கவலையளிப்பதாகவும், இப்பிரதேச மக்களின் நன்மைகருதி குறித்த மதகு உடனடியாக செப்பனிடப்படல் வேண்டுமெனவும் தெரிவித்தார்.

ஆகவே, இப்பிரதேச மக்களின் நலன்கருதி குறித்த மதகினை செப்பனிட்டுத் தர சம்பந்தப்பட்ட தரப்பினர் துரித நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென மக்கள் வேண்டுகோள் விடுப்பதுடன், இது தொடர்பில் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும், பிரதேச அபிவிருத்திக்குழுத் தலைவருமான ஹாபிஸ் நஸீர் அஹமட் பிரதேச மக்கள் சார்பில் கோரிக்கையை நிறைவேற்ற முன்வருமாறும் மக்கள் வேண்டுகோள் விடுக்கின்றனர்.




டெல்ட்டா வைரஸினால் பாதிக்கப்படுபவர்களின் எண்ணிக்கை அடுத்த இரண்டு வாரங்களில் அதிகரிக்கக்கூடும் என அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் எச்சரித்துள்ளது.

அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் ஊடக குழுவின் உறுப்பினர் வைத்தியர் ருவான் ஜெயசூரிய இதனைத் தெரிவித்துள்ளார். போக்குவரத்துக் கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்டுள்ளதால் மேலும் நோயாளிகள் அடையாளம் காணப்படலாம் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

கொரோனா வைரஸினால் பாதிக்கப்படுபவர்களின் எண்ணிக்கை அதிகரிக்கும். டெல்ட்டா வைரஸ் நாட்டின் ஏனைய பகுதிகளுக்கு பரவும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

அடையாளம் காணப்பட்ட நோயாளர்களின் எண்ணிக்கையுடன் ஒப்பிடும்போது இலங்கையில் இறப்பு வீதம் இந்தியா போன்ற நாடுகளுக்கு சமமாக காணப்படுகின்றது. பொதுமக்கள் தொடர்ந்தும் சமூக விலக்கலை பின்பற்றவேண்டும், முகக்கவசங்களை அணியவேண்டும் என கோரிக்கை விடுக்கப்பட்டாலும் அவை பின்பற்றப்படுவதாக தெரியவில்லை.

வைரஸ் பரவுவதை கட்டுப்படுத்துவதற்காக போக்குவரத்து கட்டுப்பாடுகள் தொடரவேண்டிய சூழ்நிலை இருக்கிறது. மறுபக்கம் கொரோனா தடுப்பூசியின் பலாபலன்கள் உடனடியாக தென்படாது. அதற்கு சில மாதங்கள் எடுக்கும். இன்னொருபக்கம் பிசிஆர் மாதிரிகளை பெறுவது மருத்துவமனைகளில்கூட குறைவடைந்துள்ளது. ஆபத்தான பகுதிகள் எனக் கருதப்படும் இடங்களை சோதனைசெய்து முன்கூட்டியே பரவலை தடுப்பதற்கான நடவடிக்கைகள் எவையும் இடம்பெறவில்லை. சுகாதார அமைச்சு வெளியிட்டுள்ள தரவுகள்கூட உண்மை நிலையை, யதார்த்தத்தை வெளிப்படுத்தாத நிலைமையே காணப்படுகிறது.

தமிழன்
THAMILAN
தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்
இல. 91. விஜேராம மாவத்தை. கொழும்பு 07.
தொலைநகல் : 0112 67 34 42.
தொலைபேசி : 0115 200 900/ 0115 88 61 87
விளம்பரம் : 077 172 1880
மின்னஞ்சல் : thamilaneditorial@gmail.com/ thamilaneditor@gmail.com
2021, ஜூலை 17ஆம் திகதி, சனிக்கிழமை

# எச்சரிக்கையுடன் இருக்கவேண்டும் மக்கள்!

சுகாதார அமைச்சு பிசிஆர் சோதனைகளை அதிகரித்து மரபணு ஆய்வுகளையும் அதிகரிக்காவிட்டால் அடுத்த நான்கு வாரங்களில் நான்காவது அலை உருவாகலாம் என மருத்துவ ஆய்வுகூட விஞ்ஞான கல்லூரி எச்சரித்துள்ளதையும் கவனத்திற்கொள்ளவேண்டும்.

பிசிஆர் சோதனைகளை முன்னெடுப்பதற்கான திறனை அதிகரிக்குமாறு ஆய்வுகூட தொழிலாளர்கள் சுகாதார அமைச்சைக் கோரிவந்தாலும் அதற்கு இதுவரை உரிய நடவடிக்கையில்லை. மேலதிக பிசிஆர் பரிசோதனை இயந்திரங்களுக்கான அவசியமில்லை. சுகாதார அமைச்சு விரும்பினால் தற்போது உள்ளவற்றை வைத்தே பரிசோதனைகளை அதிகரிக்கலாம். தற்போதுள்ள வசதிகளை வைத்துக்கொண்டு பிசிஆர் பரிசோதனைகளை பல மடங்காக அதிகரிக்க முடியும் .

சிறிய எண்ணிக்கையிலான நடமாடும் பிசிஆர் ஆய்வுகூடங்கள் மூலம் பிசிஆர் பரிசோதனைகள் மற்றும் அறிக்கைகளை வெளியிடுவதிலுள்ள பிரச்சினைகளுக்குத் தீர்வைக் காணமுடியும். இது பிராந்திய நகரங்களில் காணப்படும் பல பிரச்சினைகளுக்கு தீர்வைக் காண உதவியாக அமையும். குறிப்பாக, உயிரிழந்தவர்களின் உடல்கள் தொடர்பான பிரச்சினைக்குத் தீர்வைக் காண உதவும்.

அரசாங்கம் இதற்கான நிதியை ஒதுக்கீடுசெய்துள்ளது. ஆனால், சுகாதார அமைச்சு தேவையான சாதனங்களைப் பெறுவதை தாமதப்படுத்தும் நிலையே உள்ளது. நடமாடும் பிசிஆர் ஆய்வுகூடங்கள் செயற்படுவதை தடுப்பதற்கான நோக்கமாக இதனை கருதமுடியும். மாதிரிகளை பெறுவது மருத்துவமனைகளில் கூட குறைவடைந்துள்ளது. ஆபத்தான பகுதிகள் என கருதப்படும் இடங்களை சோதனை செய்து முன்கூட்டியே பரவலை தடுப்பதற்கான நடவடிக்கைகள் எவையும இடம்பெறவில்லை.

மீண்டும் தவறான முடிவுகளை எடுத்தால் அடுத்த நான்கு வாரங்களில் நாங்கள் மீண்டும் இன்னொரு அலையை எதிர்கொள்வதற்கான சந்தர்ப்பம் அதிகமாக உள்ளது.

பொதுமக்கள் தங்கள் எச்சரிக்கையை கைவிடக்கூடாது. சுகாதார நடைமுறைகளை பின்பற்றுவதும் தடுப்பூசியை ஏற்றிக்கொள்வதும் மட்டுமே இப்போதுள்ள தீர்வுகள்.

# கொங்குநாடு கோஷம்

# தமிழகத்தை பிரிக்கும் முயற்சியா?



-ரமணி-

தமிழகத்தில் சூடு பிடிக்கும் விவகாரமாக கொங்குநாடு எனும் சொல் மேலெழுந்துள்ளது. இந்தியப் பிரதமரின் அமைச்சரவை விரிவாக்கம் ஜூன் மாதம் 8ஆம் திகதி நடந்தது. மத்திய இணையமைச்சர் எல்.முருகனுக்கான அறிமுக விவரக் குறிப்பில் 'கொங்கு நாடு' என்று இடம்பெற்றது. அதனை மேற்கோள் காட்டி தமிழகப் பத்திரிகை ஒன்று, 'கொங்குநாடு' உருவாகப் போகிறது என கட்டுரை ஒன்றை பிரசுரித்தது. அதன் பின்னர் கொங்குநாடு ஊடக விவாதமானது.

இந்திய மத்திய அரசு என்ற சொற்பதமே இதுவரை வழக்கத்தில் இருந்தது. தமிழக முதல்வராக ஸ்டாலின் பதவி ஏற்றதும், மத்திய அரசு என்று சொல்லாமல் ஒன்றிய அரசு என்றார். ஒன்றிய அரசு என்ற சொல் பாரதீய ஜனதா கட்சியை உசுப்பிவிட்டது. ஸ்டாலினுக்குப் பதிலடி கொடுக்கக் காத்திருந்த பாரதீய ஜனதாக் கட்சி, எல்.முருகனின் பெயருக்கு முன்னால் கொங்குநாடு எனக் குறிப்பிட்டு சீண்டியது. ஒரத்தநாடு, வல்லநாடு, வருசநாடு, கொங்குநாடு என்பன தமிழகத்தில் பேச்சு வழக்கில் உள்ளவை. கொங்குநாட்டை கொங்கு மண்டலம் எனவும் அழைப்பர்.

இந்திய மாநிலங்களில் பலமுடன் உள்ள கட்சிகளைப் பிரித்து ஆட்சியைப் பிடித்த பாரதீய ஜனதாவால் தமிழகத்தில் கால் பதிக்க முடியவில்லை. அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் தமிழகத்தில் ஆட்சியில் இருந்தபோது பாரதீய ஜனதாவின் கை ஓங்கி இருந்தது. ஸ்டாலின் முதல்வரானதும் எதிர்க்கட்சிகளின் கை ஒடுக்கப்பட்டது.

இந்தியாவிலிருந்து பிரிந்து செல்ல நடந்த போராட்டங்கள் அடக்கி ஒடுக்கப்பட்டன. மாநிலத்தைப் பிரிக்க வேண்டும் என்ற கோஷங்களும் முளையிலேயே கிள்ளப்பட்டன. ஆனால், இந்திய மத்திய அரசே இல்லாத ஒரு நாட்டை உருவாக்கி இருப்பது சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளது.

எம்.ஜி.ஆர். காலத்திலிருந்தே கொங்குமன்டலம் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் கோட்டை. தேர்தல்கலின்போது கொங்கு மண்டலம்தான் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்துக்குக் கைகொடுத்தது. கே.பி. முனுசாமியைத் தவிர, அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர்கள் யாரும் இதனைப் பெரிதாக எடுக்கவில்லை. சின்னச் சின்னப் பிரச்சினைகளுக்கு டுவிட்டரில் பதிலளிக்கும் எடப்பாடியும், பன்னீரும் மௌனமாக இருக்கின்றனர்.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்கு கொங்கு மண்டலத்தில் பலமான தலைவர்கள் யாரும் இல்லை. அதற்காகவே கமலின் சகாவான மகேந்திரனை கட்சியில் சேர்த்துள்ளது. மகேந்திரனின் செல்வாக்கினால் கொங்கு மண்டலத்தில் பலமாகக் கால் பதிக்கலாம் என ஸ்டாலின் நினைக்கிறார்



கோவையில் அத்வானி கலந்துகொண்ட கூட்டத்தில் நடைபெற்ற குண்டுவெடிப்பின் பின்னர் பாரதீய ஜனதாக் கட்சி அங்கு தனது பிரசாரத்தைத் தீவிரமாக்கியது. குண்டு வெடிப்பின் வருடாந்த நினைவு நாளை நடத்தி தனது இருப்பை பலப்படுத்தியுள்ளது.

கொங்கு மண்டலத்தைச் சேர்ந்த சி.பி.ராதாகிருஷ்ணன், வானதி சீனிவாசன், எஸ்.ஆர்.சேகர், ஏ.பி.முருகானந்தம், கனகசபாபதி என பலருக்கும் பாரதீய ஜனதாக் கட்சியில் முக்கிய பொறுப்புகள் கொடுக்கப்பட்டுள்ளன. இந்நிலையில், கொங்கு மண்டலத்தைச் சேர்ந்த எல்.முருகன் மத்திய இணை அமைச்சராகவும், அண்ணாமலை மாநிலத் தலைவராகவும் நியமிக்கப்பட்டுள்ளனர். கொங்கு மண்டலத்தை வளைக்கும் அரசியலை பாரதீய ஜனதா வலுப்படுத்தத் தொடங்கியுள்ளது.



தமிழகத்திலிருந்து கொங்கு நாடு பிரிக்கப்பட்டு ஜூனியன் பிரதேசமாக மாற்றும் திட்டத்தை பாரதீய ஜனதாக் கட்சி கையில் எடுத்துள்ளது என்ற விவாதம் வலுப்பெறுவதால் தமிழக பாரதீய ஜனதாக் கட்சித் தலைவர்கள் அதனை மறுத்துரைக்கின்றனர்.

'கொங்கு நாடு' என்ற கோரிக்கை அரசியலில் தாக்கத்தை ஏற்படுத்த வாய்ப்பில்லை. ஆனால், 'திராவிடநாடு', 'ஒன்றிய அரசு' , தனித் தமிழ்நாடு என்றெல்லாம் பிரிவினை உள்நோக்கத்துடன் பேசி வருபவர்களுக்கு பதிலடியாக 'கொங்கு நாடு' கோரிக்கை இருக்கும். கொங்கு நாடு, சேர நாடு, சோழ நாடு, பாண்டிய நாடு, நாஞ்சில் நாடு என்பதெல்லாம் இந்தியாவில் இருந்தவை. இல்லாத திராவிட நாடு என்பதை சொல்லிக் கொள்ளும்போது, ஏற்கனவே இருந்த 'கொங்கு நாடு' என்று சொல்வதில் தவறில்லை. அவர்கள் 'திராவிட நாடு' என்று சொல்லும் வரை, நாங்கள் 'கொங்கு நாடு' என்று சொல்லிக்கொண்டே இருப்போம் என்று யாதவ மகாசபை தேசிய தலைவரும், இந்திய கல்வி மக்கள் முன்னேற்றக் கழகத் தலைவருமான தேவநாதன் யாதவ் தெரிவித்துள்ளார்.

தெலுங்கானா அல்லது உத்தரகாண்ட் மாநிலங்கள்போல் இல்லாமல், தமிழ்நாட்டின் நவீன அரசியல் வரலாற்றில் தனி கொங்கு நாடு பற்றி ஒருபோதும் கோரிக்கை அல்லது விவாதங்கள் இருந்ததில்லை. எனவே, விவாதத்தில் எந்த அரசியல் அல்லது சமூக பொருத்தங்களும் இல்லை. இருப்பினும், மத்திய அரசு என்பதை விட ஒன்றிய அரசு என்ற வார்த்தையைப் பயன்படுத்துகிற திமுகவின் உறுதியான நிலைப்பாடு. மாநிலத்தை பிரிக்கும் எந்த நடவடிக்கையையும் பாரதீய ஜனதா மறுத்துள்ளது.

கொங்கு மண்டலத்தைத் தனியாகப் பிரிக்கவேண்டும் என அந்தப் பகுதி மக்கள், அரசியல் தலைவர்கள், கட்சிகள், அமைப்பு என யாரும் கோரிக்கை வைத்ததாக தெரியவில்லை. போடோலாந்து, கூர்காலாந்து கேட்கிறார்கள் என்றால் அதில் ஒரு குறிப்பிட்ட இன மக்கள் மட்டும் வாழ்கிறார்கள். அதில் ஒரு நியாயம் இருக்கிறது. ஆனால், கொங்கு மண்டலத்தில் அப்படி ஒரு குறிப்பிட்ட இன மக்கள் மட்டும் வாழ்கிறார்கள் என்றும் சொல்லிவிட முடியாது. கொங்கு வேளாளர் ஒரு பகுதியினர் அங்கு இருக்கிறார்கள் என்றாலும் முக்குலத்தோர், ஒக்கலிகர், வன்னியர், நாடார் என எல்லோரும் கலந்த பகுதி. அதுமட்டுமல்ல, வட மாநிலத்தவர்களையும் உள்ளடக்கிய தொழில் நகரம்.

அரசியல்வாதிகள் தம் இஷ்டத்துக்கு கொங்கு நாடு என குறிப்பிட்டதை ஊடகங்கள் பெரிதுபடுத்திவிட்டன. 'கொங்கு நாடு' என்ற கருத்தை ஆதரிப்பதாக சில பாஜக சமூக ஊடக பயனர்களிடம் காணப்பட்டதையடுத்து, மாநிலத்தை பிளவுபடுத்த முயற்சிப்பதாகக் கூறப்படுவது குறித்து தமிழகத்தில் ஒரு விவாதம் நடைபெறுகிறது.

பாட்டாளி மக்கள் கட்சியின் நிறுவுனர் நன்னியர் பகுதியை தனியாகப் பிரிக்க வேண்டும் எனவும், நிறுவுனர் ராமதாஸ், கொங்கு பகுதியாக தனியாகப் பிரிக்க வேண்டும் என ஈஸ்வரனும் தொடர்ச்சியாகத் தெரிவித்து வருகின்றனர். தமிழக முதல்வர் திராவிட நாடு என்கிறார். இவற்றை பாரதீய ஜனதாவால் சகிக்க முடியவில்லை. பாநிலக் கட்சிகளின் துணை இல்லாமல் பாரதீய ஜனதாவால் தமிழகத்தில் வெற்றி பெற முடியாது.

கொங்கு நாடு என்று எழுதிய எல்.முருகனே அதை ஏற்றுக்கொள்ளவில்லை. மத்திய, மாநில அரசுகள் பேசவில்லை. எனவே, அதற்கு முக்கியத்துவம் கொடுக்கவேண்டியதில்லை. எந்தவித சட்டதிட்டத்துக்கும், வரன்முறைக்கும் ஒத்துவராத கோரிக்கை. அதை பாரதீய ஜனதா ஏற்றுக்கொள்ளாது. அரசியல் தெளிவில்லாதவர்கள் வேண்டுமானால் இது குறித்து தொடர்ந்து பேசிக்கொண்டிருக்கலாம். மற்றபடி கொங்கு நாடு என்ற பேச்சு அர்த்தமற்றது என்பதே பெரும்பாலானோரின் கருத்து.

# 1.5 மில்லியன் மொடர்னா தடுப்பூசிகளை நன்கொடையாக வழங்கியது அமெரிக்கா






அமெரிக்கா வழங்கியுள்ள மொடர்னா கொரோனா வைரஸ் தடுப்பூசிகள் இலங்கையர்கள் மீண்டும் தொழில்களுக்கு திரும்புவதற்கும் ஆரோக்கியமாக விளங்குவதற்கும் உதவிபுரியும் - என இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் அலைனா டெப்பிளிட்ஸ் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

கொவக்ஸ் திட்டத்தின்கீழ் அமெரிக்கா வழங்கியுள்ள 1.5 மில்லியன் கொரோனா வைரஸ் தடுப்பூசிகள் இலங்கை வந்து சேர்ந்துள்ள நிலையில், இலங்கைக்கான அமெரிக்கத் தூதரகம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் இதனை தெரிவித்துள்ளது

அதில் மேலும்தெரிவிக்கப்பட்டுள்ளதாவது

இலங்கைக்கு 1.5 மில்லியனுக்கும் மேற்பட்ட மொடர்னா கொவிட்-19 தடுப்பூசிகளை அமெரிக்கா நன்கொடையாக வழங்கியுள்ளது.

கொவெக்ஸ் திட்டத்தின் ஊடாக விநியோகிக்கப்படும் இந்தத் தடுப்பூசிகள், உயிர்களை பாதுகாப்பதுடன் பெருந் தொற்றையும் முடிவுக்குக் கொண்டுவர உதவும்.

சர்வதேச பெருந்தொற்றை முடிவிற்கு கொண்டுவருவதற்கான அமெரிக்காவின் அர்ப்பணிப்பு காரணமாகவும் இலங்கை மக்களுடன் நீடித்த உறவுகள் காரணமாகவும் இந்தத் தடுப்பூசிகளை இலவசமாக இலங்கைக்கு வழங்கியுள்ளோம் என இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் அலைனா டெப்பிளிட்ஸ் தெரிவித்தார்.

இந்தத் தடுப்பூசிகள் இலங்கையர்கள் மீண்டும் தொழில்களுக்குத் திரும்புவதற்கும் ஆரோக்கியமாக விளங்குவதற்கும் உதவிபுரியும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கும் அமெரிக்காவுக்கு மிடையிலான நீண்டகால உறவின் வெளிப் பாடாக நாங்கள் இதனை கருதுகின்றோம் என அமெரிக்கத் தூதுவர் தெரிவித்துள்ளார்.

இந்தத் தடுப்பூசிகளை வழங்குவதற்கு இலங்கையின் சுகாதார அமைச்சு யுனிசெவ் ஏனைய கொவக்ஸ் சகாக்கள் ஆகியவர்களின் ஒத்துழைப்புடனான எங்கள் நடவடிக்கை




பெருந்தொற்றை கட்டுப்படுத்துவதற்கும் மாற்றமடைந்த புதிய வைரஸ்களின் உருவாக்கத்தை தாமதப்படுத்துவதற்கும் சர்வதேச பொருளாதாரத்தை மீள ஆரம்பிப்பதற்கும் முக்கியமானது என அமெரிக்கத் தூதுவர் தெரிவித்துள்ளார்.

# நாட்டில் 51,61,127 பேருக்கு தடுப்பூசி ஏற்றப்பட்டுள்ளது

## தொற்றுநோயியல் பிரிவு தெரிவிப்பு

நாட்டில் இதுவரை 51 இலட்சத்து 61 ஆயிரத்து 127 பேருக்கு முதல் கட்ட தடுப்பூசி ஏற்றப்பட்டுள்ளதாக தொற்று நோயியல் பிரிவு குறிப்பிட்டுள்ளது.

இதற்கமைய, நேற்றுமுன்தினம் மாத்திரம் 2 இலட்சத்து 80 ஆயிரத்து 11 பேருக்கு சினோபார்ம் முதல் ஊசி ஏற்றப்பட்டுள்ளது.

மேலும், சினோபார்ம் தடுப்பூசியின் இரண்டாவது ஊசி நேற்றுமுன்தினம் 27 ஆயிரத்து 117 பேருக்கு ஏற்றப்பட்டுள்ளதாக தொற்று நோயியல் பிரிவு குறிப்பிட்டுள்ளது.

இதேவேளை, இதுவரை 3 இலட்சத்து 85 ஆயிரத்து 885 பேருக்கு கொவிசீல்ட் தடுப்பூசியின் இரண்டாவது ஊசி ஏற்றப்பட்டுள்ளது.

அத்துடன், இதுவரை ஒரு இலட்சத்து 57 ஆயிரத்து 368 பேருக்கு ஸ்புட்னிக்வீ தடுப்பூசியின் முதல் ஊசி ஏற்றப்பட்டுள்ளதாக தொற்று நோயியல் பிரிவு தெரிவித்துள்ளது.

மேலும் 14 ஆயிரத்து 464 பேருக்கு ஸ்புட்னிக்வீ தடுப்பூசியின் இரண்டாவது ஊசி ஏற்றப்பட்டுள்ளது.

அதேபோல், நேற்று முன்தினம் 7 ஆயிரத்து 993 பேருக்கு பைசர் தடுப்பூசியின் முதல் ஊசி ஏற்றப்பட்டுள்ள நிலையில், இதுவரை 39 ஆயிரத்து 176 பேருக்கு பைசர் தடுப்பூசியின் முதலாவது டோஸ் ஏற்றப்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

இதேவேளை, இலங்கையில் அபிவிருத்திப் பணிகளில் ஈடுபட்டுள்ள சீனப் பிரஜைகள் 2 ஆயிரத்து 865 பேருக்கு சினோபார்ம் தடுப்பூசியின் முதல் ஊசி ஏற்றப்பட்டுள்ளதுடன், 2 ஆயிரத்து 435 பேருக்கு இரண்டாவது ஊசியும் ஏற்றப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# டெல்ட்டா நோயாளர்களின் எண்ணிக்கை அடுத்த இருவாரங்களில் அதிகரிக்கும்

## அரசாங்க மருத்துவ அதிகாரிகள் சங்கம் எச்சரிக்கை

டெல்ட்டா திரிபினால் பாதிக்கப்படுபவர்களின் எண்ணிக்கை அடுத்த இரண்டுவாரங்களில் அதிகரிக்கக்கூடும் என அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் ஊடக குழுவின் உறுப்பினர் வைத்தியர் ருவான் ஜெயசூரிய தெரிவித்துள்ளார்.

போக்குவரத்துக் கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்டுள்ளதால் மேலும் நோயாளிகள் அடையாளம் காணப்படலாம் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

கொரோனா வைரஸினால் பாதிக்கப் படுபவர்களின் எண்ணிக்கை அதிகரிக்கும். குறிப்பாக, டெல்ட்டா திரிபு நாட்டின் ஏனைய பகுதிகளுக்கு பரவும் என அவர் தெரிவித்துள்ளார்.

அடையாளம் காணப்பட்ட நோயாளர்களின் எண்ணிக்கையுடன் ஒப்பிடும்போது இலங்கையில் இறப்பு வீதம் இந்தியா போன்ற நாடுகளுக்கு சமமாக காணப்படுவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

பொதுமக்கள் தொடர்ந்தும் சமூக விலகலை பின்பற்றவேண்டும். முகக்கவசங்களை அணியவேண்டும் என அவர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

வைரஸ் பரவுவதை கட்டுப்படுத்துவதற்காக போக்குவரத்துக் கட்டுப்பாடுகள் தொடரவேண்டும். கொரோனா தடுப்பூசியின் பலாபலன்கள் உடனடியாக தென்படாது சில மாதங்கள் எடுக்கும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

# ஆசிரியர்கள் மீதான அடக்குமுறையை தவிர்; நுவரெலியாவில் கவனயீர்ப்புப் போராட்டம்





ஆசிரியர்கள் மீதான அடக்குமுறையை தவிர், விடுதலை செய்யப்பட்டும் தனிமைப்படுத்தி வஞ்சிக்கும் ஆசிரியர் சங்கத்தினரை உடனே விடுவித்து விடு என பல கோரிக்கைகளையும் கோஷங்களையும் எழுப்பி நுவரெலியா நகரில் ஒன்றிணைந்த ஆசிரியர் சங்கங்கள் போராட்டம் ஒன்றை முன்னெடுத்திருந்தனர்.

இலவச கல்வியை வியாபாரமாக்கும் கொத்தலாவலை சட்டமூலத்தை சுருட்டிக்கொள், இலவச கல்வி உரிமையை பறிக்காதே, விவாசாயிக்கு உரத்தை வழங்கு, நீதிக்கான போராட்டத்திற்கு தடைவிதிக்காதே, கொத்தலாவலை பல்கலை கழகத்தை இராணுவமயப்படுத்தாதே, தேசிய ஆசிரியர்கள் பிரச்சினைக்கு தீர்வை வழங்கு, ஆசிரியர்களை வஞ்சிப்பதை நிறுத்திக்கொள், ஆசிரியர்களின் கடன் சுமைக்கு தீர்வை வழங்கு, ஆசிரியர்களை அவமானம்படுத்துவதை நிறுத்தி கொள்,ஆசிரியர்களை தூற்றி பேச அமைச்சருக்கு தகுதியில்லை, ஆசிரியர்கள் மீதான அடக்குமுறையை தவிர், விடுதலை செய்யப்பட்டும் தனிமைப்படுத்தி வஞ்சிக்கும் ஆசிரியர் சங்கத்தினரை உடனே விடிவித்து விடு என பல கோரிக்கைகளையும் கோஷங்களையும் எழுப்பியே இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

நுவரெலியா மத்திய தபால் நிலையத்திற்கு முன் காலை 10.30 மணியலவில் இந்த ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இதில் சமூக அமைப்புகள், ஆசிரியர் சங்கங்கங்கள், வர்த்தக சங்கத்தினர், சமூக நீதிக்கான அமைப்பினர் என பலரும் கலந்துகொண்டு போராட்டத்திற்கு வலுசேர்த்திருந்தனர்.

# பி.சி.ஆர். பரிசோதனைகளை அதிகரிக்காவிட்டால் 4 ஆவது கொரோனா அலை ஏற்படும் அபாயம்

## வைத்தியர் ரவிகுமுதேஸ் எச்சரிக்கை

சுகாதார அமைச்சு பிசிஆர் பரிசோதனைகளை அதிகரித்து மரபணு ஆய்வுகளையும் அதிகரிக்காவிட்டால் அடுத்த நான்கு வாரங்களில் நான்காவது அலை உருவாகலாம் என மருத்துவ ஆய்வுகூட விஞ்ஞான கல்லூரியின் தலைவர் ரவிகுமுதேஸ் எச்சரித்துள்ளார்.

மாதிரிகளை பெறுவது மருத்துவமனைகளில் கூட குறைவடைந்துள்ளது, ஆபத்தான பகுதிகள் என கருதப்படும் இடங்களை சோதனைசெய்து முன்கூட்டியே பரவலை தடுப்பதற்கான நடவடிக்கைகள் எவையும இடம்பெறவில்லை எனவும் தெரிவித்துள்ள அவர் சுகாதார அமைச்சு வெளியிட்டுள்ள தரவுகள் யதார்த்தத்தை வெளிப்படுத்தவில்லை எனவும் குறிப்பிட்டுள்ளார்.

பிசிஆர் பரிசோதனைகளை முன்னெடுப்பதற் கான திறனை அதிகரிக்குமாறு ஆய்வுகூட தொழிலாளர்கள் சுகாதார அமைச்சினை கோரி வருவதாக அவர் தெரிவித்துள்ளார்.

மேலதிக பிசிஆர் பரிசோதனை இயந்திரங்களுக்கான அவசியமில்லை. சுகாதார அமைச்சு விரும்பினால் தற்போதுள்ளவற்றை வைத்தே சோதனைகளை அதிகரிக்கலாம். தற்போதுள்ள வசதிகளை வைத்துக்கொண்டு பிசிஆர் பரிசோதனைகளை பல மடங்காக அதிகரிக்க முடியும் என அவர் தெரிவித்துள்ளார்.

சிறிய எண்ணிக்கையிலான நடமாடும் பிசிஆர் ஆய்கூடங்கள் மூலம் பிசிஆர் பரிசோதனைகள் மற்றும் அறிக்கைகளை வெளியிடுவதில் உள்ள பிரச்சினைகளுக்கு தீர்வை காணமுடியும் என அரசாங்கத்திற்கு நாங்கள் எப்போதோ தெரிவித்துவிட்டோம், இது பிராந்திய நகரங்களில் காணப்படும் பல பிரச்சினைகளுக்கு தீர்வை காண உதவியாக அமையும். குறிப்பாக உயிரிழந்தவர்களின் உடல்கள் தொடர்பான பிரச்சினைக்கு தீர்வை காண உதவும் என அவர் தெரிவித்துள்ளார்.

அரசாங்கம் இதற்கான நிதியை ஒதுக்கீடு செய்துள்ளது. ஆனால், சுகாதார அமைச்சு தேவையான சாதனங்களை பெறுவதை தாமதப்படுத்துகின்றது என ரவிகுமுதேஸ் தெரிவித்துள்ளார்.

நடமாடும் பிசிஆர் ஆய்வுகூடங்கள் செயற்படுவதை தடுப்பதற்கான நோக்கமாக இதனை கருதமுடியும். மாதிரிகளை பெறுவது மருத்துவமனைகளில் கூட குறைவடைந்துள்ளது, ஆபத்தான பகுதிகள் என கருதப்படும் இடங்களை சோதனை செய்து முன்கூட்டியே பரவலை தடுப்பதற்கான நடவடிக்கைகள் எவையும இடம்பெறவில்லை எனவும் தெரிவித்துள்ள அவர், சுகாதார அமைச்சு வெளியிட்டுள்ள தரவுகள் யதார்த்தத்தை வெளிப்படுத்தவில்லை எனவும் குறிப்பிட்டுள்ளார்.


மார்ச் ஏப்பிரல் மாதங்களில் நாங்கள் இவ்வாறான செயற்பாடுகளை அவதானித்தோம், நாங்கள் மீண்டும் தவறான முடிவுகளை எடுத்தால் அடுத்த நான்கு வாரங்களில் நாங்கள் மீண்டும் இன்னொரு அலையை எதிர்கொள்வதற்கான சந்தர்ப்பம் அதிகமாக உள்ளது என ரவிகுமுதேஸ் தெரிவித்துள்ளார்.


பொதுமக்கள் தங்கள் எச்சரிக்கையை கைவிடக்கூடாது என்பதே நாங்கள் அவர்களுக்கு தெரிவிக்க விரும்புகின்ற ஒரே விடயம் எனவும் ரவிகுமுதேஸ் தெரிவித்துள்ளார்.

# மட்டு. வாகனேரியில் மினி சூறாவளியால் 30 வீடுகள் சேதம்









(கல்குடா நிருபர்)

மட்டக்களப்பு கோறளைப்பற்று தெற்கு கிரான் பிரதேச செயலாளர் பிரிவின் வாகனேரி குடாமுனைக்கல் கிராமத்தில் நேற்று முன்தினம் வீசிய மினி சூறாவளியினால் முப்பது வீடுகள் சேதமடைந்துள்ளதாக கிரான் பிரதேச செயலாளர் எஸ்.ராஜ்பாபு தெரிவித்தார்.

வாகனேரி குடாமுனைக்கல் கிராமத்தில் நேற்று முன்தினம் மாலை ஏற்பட்ட திடீர் சூறாவளி மற்றும் மழை காரணமாக இந்த அனர்த்தம் ஏற்பட்டுள்ளது. இதில் இரண்டு வீடுகள் முழுமையாகவும் இருபத்தெட்டு வீடுகள் பகுதியளவிலும் சேதமடைந்துள்ளன.

இதன்போது மக்கள் அச்சமடைந்த நிலையில் பாதுகாப்பான இடங்களில் தஞ்சமடைந்துள்ளனர். இம் மினி சூறாவளியினால் வீட்டுக் கூரைகள் தூக்கி வீசப்பட்டதுடன், வீட்டிலுள்ள பொருட் களுக்கும் சேதம் ஏற்பட்டுள்ளது. மினி சூறாவளி யினால் எவருக்கும் உயிரிழப்புகள் ஏற்படவில்லை.

இந்நிலைமையை நேரில் கண்டறிவதற்காக நேற்று கோறளைப்பற்று மேற்கு ஓட்டமாவடி பிரதேச சபையின் தவிசாளர் ஏ.எம்.நௌபர், கிரான் பிரதேச செயலாளர் எஸ்.ராஜ்பாபு உள்ளிட்ட பிரதேச சபை உறுப்பினர்கள், அதிகாரிகள் பலரும் சம்பவ இடத்திற்கு விஜயம் செய்திருந்தனர்.

அத்தோடு பாதிக்கப்பட்ட மக்களுக்கு உரிய நிவாரணத்தைப் பெற்றுக்கொடுப்பதற்கான நடவடிக்கைகள் அவசரமாக முன்னெடுக்கப்பட்டு வருவதாக கிரான் பிரதேச செயலாளர் எஸ்.ராஜ்பாபு தெரிவித்தார்.

# வடக்கு - கிழக்கில் 30 வயதைத் தாண்டிய அனைவருக்கும் இரு மாதத்திற்குள் தடுப்பூசி

## அமைச்சர் நாமல் ராஜபக்ஷ தெரிவிப்பு



வடக்கு - கிழக்கு மாகாணங்களைச் சேர்ந்த 30 வயதிற்கு மேற்பட்ட அனைவருக்கும் எதிர்வரும் இரண்டு மாதக் காலப்பகுதிக்குள் கொவிட் தடுப்பூசிகளை பெற்றுக்கொடுப்பதற்கு விசேட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக இளைஞர் விவகார மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்தார்.

வடக்கு - கிழக்கு மாகாண மக்களுக்கான தடுப்பூசி ஏற்றும் செயற்பாட்டை விரைவு படுத்துவது தொடர்பில் அமைச்சர் நாமல் ராஜபக்ஷ, ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுடன் கலந்துரையாடி இவ்விசேட திட்டத்தை ஏற்பாடு செய்துள்ளார்.

அதற்கமைய வடக்கு, கிழக்கு மாகாணங்களை சேர்ந்த 30 வயதிற்கு மேற்பட்ட அனைவருக்கும் எதிர்வரும் இரண்டு மாதங்களுக்குள் கொவிட் தடுப்பூசிகளை பெற்றுக்கொடுப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.









யாழ்ப்பாணம், வண்ணை ஸ்ரீ வீரமாகாளி அம்மன் கோவில் வருடாந்தத் திருவிழா நேற்றுக் காலை 8 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது.
(படங்கள்: ஐ.சிவசாந்தன்)

# கிழக்கு மாகாணத்தில் 24 மணிநேரத்தில் கொவிட் தொற்றுடன் 168 பேர் அடையாளம்

## -இதுவரை 288 பேர் உயிரிழப்பு

(அப்துல்சலாம் யாசீம்)

கிழக்கு மாகாணத்தில் நேற்றுக் காலையுடன் முடிவடைந்த 24 மணிநேரத்தில் கொவிட் தொற்றுடன் 168 பேர் இனங்காணப்பட்டுள்ளதாக கிழக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஏ.ஆர்.எம்.தௌபீக் தெரிவித்தார்.

கிழக்கு மாகாண கொவிட் தொற்று தொடர்பில் நேற்று ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

இதேவேளை, கல்முனை பிராந்தியத்தில் அதிகளவில் இனங்காணப்பட்டுள்ள நிலையில் 56 பேருக்கு தொற்று உறுதிசெய்யப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

மேலும், மட்டக்களப்பு மாவட்டத்தில் 56 பேருக்கும் அம்பாறை பிராந்திய சுகாதார சேவைகள் பணியகத்தில் 30 பேருக்கும், திருகோணமலை மாவட்டத்தில் 26 பேருக்கும் தொற்று உறுதிசெய்யப்பட்டுள்ளதாகவும் இதுவரை கிழக்கு மாகாணத்தில் மூன்றாவது அலையில் 12,825 பேருக்கு தொற்று உறுதிசெய்யப்பட்டுள்ள நிலையில், 288 மரணங்கள் சம்பவித்துள்ளதாகவும் சுகாதார சேவைகள் பணிப்பாளர் குறிப்பிட்டார்.



# மருதமுனை-03 கிராமசேவகர் பிரிவு தனிமைப்படுத்தலிலிருந்து இன்று விடுவிப்பு

## சுகாதார வைத்திய அதிகாரி அஸ்மி தெரிவிப்பு

(சர்ஜூன் லாபீர்)

கொரோனாவினால் பாதிக்கப்பட்டு கடந்த 03ஆம் திகதிமுதல் தனிமைப்படுத்தப்பட்ட மருதமுனை-03 கிராமசேவகர் பிரிவு இன்று காலை 6 மணியுடன் தளர்த்தப்படுவதற்கு தேசிய கொரோனா தடுப்பு செயலணிக்கு பரிந்துரை செய்யப்பட்டுள்ளதாக கல்முனை தெற்கு சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் ஏ.ஆர்.எம்.அஸ்மி தெரிவித்தார்.

மருதமுனை-03 கிராமசேவகர் பிரிவினை விடுவிப்பது சம்பந்தமாக நேற்று பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளரின் பணிப்புரையின்பேரில் தெற்கு சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் அஸ்மி தலைமையில் நடைபெற்ற உயர்மட்டக் கூட்டத்தில் மேற்படி பரிந்துரைக்கு முடிவெடுக்கப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.



மருதமுனை-03 கிராமசேவகர் பிரிவு முடக்கப்பட்ட நிலைமை இன்று காலை 6 மணியுடன் தளர்த்தப்பட்டாலும் தொடர்ந்தும் பொதுமக்கள் சுகாதார வழிமுறைகளை பின்பற்றி நடக்கவேண்டும் என்றும் குறிப்பிட்டார். இந்த உயர்மட்டக் கலந்துரையாடலில் கல்முனை பிரதேச செயலாளர், பொலிஸ், இராணுவ உயர் அதிகாரிகள், பொதுச் சுகாதார பரிசோதகர்கள், மருதமுனை உலமா சபை பிரதிநிதிகள், மருதமுனை வர்த்தக சங்கப் பிரதிநிதிகள் எனப் பலர் கலந்துகொண்டனர்.

# ஏறாவூரில் போதைப்பொருளுடன் ஐவர் கைது



(ஏறாவூர் நிருபர் நாஸர்)

ஹெரோயின் போதைப்பொருள் விற்பனையில் ஈடுபட்டிருந்த மற்றும் தம்வசம் வைத்திருந்த குற்றச்சாட்டின் பேரில் ஐந்து பேர் கைது செய்யப்பட்டுள்ளதாக ஏறாவூர் பொலிஸார் தெரிவித்தனர்.

4835 மில்லிகிராம் போதைப்பொருள் இவர்களிடமிருந்து மீட்கப்பட்டுள்ளதாக ஏறாவூர் பொலிஸ் ஊழல் ஒழிப்புப் பிரிவு பொறுப்பதிகாரி எச்.எம்.ஷியாம் தெரிவித்தார்.

இவர்கள் ஏறாவூர் சுற்றுலா நீதிமன்ற நீதிபதி முன்னிலையில் ஆஜர்செய்யப்பட்டதையடுத்து, 14 நாட்கள் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளதாக அவர் கூறினார்.

இவர்களில் ஒருவர் மாத்தறையை பிறப்பிடமாகக்கொண்டு புன்னக்குடா கடற்கரையில் வசித்துவரும் பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்த மீனவராவார்.

ஏறாவூர் பொலிஸ் நிலையத்தின் விசேட குழுவொன்று போதைப் பொருள் ஒழிப்பு நடவடிக்கையில் தீவிரமாக ஈடுபட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# திஸ்ஸபுர சிவில் பாதுகாப்புப் படையினர் 50 பேருக்கு முள்ளிப்பொத்தானையில் சேதனப் பசளை தயாரிப்பு பயிற்சி



(ஹஸ்பர் ஏ ஹலீம்)

ஜனாதிபதியின் சுபீட்சத்தின் நோக்கு கொள்கை பிரகடனத்துக்கமைவாக நாட்டில் நஞ்சற்ற உணவு உற்பத்தியை மேற்கொள்ளும் நோக்கில் இரசாயனமற்ற சேதனப் பசளை தயாரிக்கும் பணி இடம்பெற்றுவரும் நிலையில், முள்ளிப்பொத்தானை கமநல சேவைகள் அபிவிருத்தி நிலைய பிரிவுக்குட்பட்ட முள்ளிப்பொத்தானை 228பி பகுதியில் திஸ்ஸபுர சிவில் பாதுகாப்புப் படையினருக்கு சேதனப் பசளை தொடர்பான பயிற்சி நிகழ்வொன்று இடம்பெற்றது.

குறித்த பகுதியின் விவசாயன போதனாசிரியர் யூ.ஜீ.எஸ்.விக்ரமசிங்க தலைமையில் நேற்று இடம்பெற்றது.

சுமார் 3 ஏக்கர் நிலப்பரப்பில் இந்த சேதனப் பசளை உரம் தயாரிப்பு இடம்பெறவுள்ளது. சேதனப் பசளை தயாரிப்பு தொடர்பிலான பயிற்சிகள் சிவில் பாதுகாப்புப் படையினருக்கு வழங்கப்பட்டதோடு, இதில் 50 நபர்கள் பங்குபற்றினர்.

மாவட்ட விவசாய உதவிப் பணிப்பாளர் எம்.பரமேஸ்வரனின் வேண்டுகோளுக்கிணங்க குறித்த சேதன உரம் தயாரிப்பு முறை அமுல்படுத்தப்பட்டது.

இந்நிகழ்வில் முள்ளிப்பொத்தானை கமநல சேவை நிலையத்தின் கமநல அபிவிருத்தி உத்தியோகத்தர் எம்.கே.அஜீத்கான், முள்ளிப்பொத்தானை விவசாய ஆராய்ச்சி உற்பத்திப் பிரிவின் கமநல அபிவிருத்தி நிலையத்தின் முகாமைத்துவ உதவியாளர் எம்.எஸ்.அப்துல் ஹலீம், விவசாய போதனா சிரியர்கள் எனப் பலர் கலந்துகொண்டனர்.

# பொத்துவிலில் கொரோனா விழிப்புணர்வு



(ஏ.எல்.எம்.ஷினாஸ்)

பொத்துவிலில் மிக வேகமாக பரவிவரும் கொரோனா தொற்று தாக்கத்திலிருந்து பொதுமக்களை பாதுகாக்கும் பொருட்டு விழிப்புணர்வூட்டும் வேலைத்திட்டம் நேற்று பொத்துவில் பிரதேச சபையுடன் இணைந்து பொத்துவில் சுகாதார வைத்திய அதிகாரி காரியாலயத்தினால் முன்னெடுக்கப்பட்டது.

ஆரம்பகட்டமாக பொத்துவில் பொதுச் சந்தையில், பொதுச் சுகாதார காரியாலயம் தொடக்கம் தபால் அலுவலகம் வரை வீதி விழிப்புணர்வு நடைபவனி இடம்பெற்று துண்டுப்பிரசுரங்களும் விநியோகிக்கப்பட்டன.

இந்நிகழ்வில் பொத்துவில் சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் ஏ.யூ.அப்துல் சமட், பிரதேச சபை தவிசாளர் எம்.எச்.அப்துல் ரஹீம், மேற்பார்வை பொதுச் சுகாதார பரிசோதகர் எம்.எஸ்.அப்துல் மலிக், பொதுச் சுகாதார பரிசோதகர்கள், பிரதேச சபை உறுப்பினர்கள், ஊழியர்கள், ஸ்ரீலங்கா யுனிட்ஸ் (Sri Lanka Unites) அமைப்பின் தொண்டர்கள் மற்றும் பொதுச் சுகாதார அலுவலக தன்னார்வ தொண்டர்கள் எனப் பலர் இதில் கலந்துகொண்டனர்.

கிழக்கு செய்திகள்
eastthamilan@gmail.com

# கல்முனை வடக்கில் 44 பேரிடம் மேற்கொண்ட அன்ரிஜன் பரிசோதனையில் 9 பேருக்கு கொரோனா



(பாண்டிருப்பு நிருபர்)

கல்முனை வடக்கு சுகாதாரப் பிரிவினரால் 44 பேருக்கு நேற்று மேற்கொள்ளப்பட்ட அன்ரிஜன் பரிசோதனையில் 9 பேருக்கு கொரோனா தொற்று உறுதிசெய்யப்பட்டுள்ளதாக கல்முனை வடக்கு பிராந்திய சுகாதாரப் பணிமனை தெரிவித்துள்ளது.

கல்முனை வடக்கில் கொரோனா தொற்றைக் கட்டுப்படுத்துவதற்கான விழிப்புணர்வு செயற்பாட்டில் சுகாதார வைத்திய அதிகாரி டொக்டர் ஆர்.கணேஸ்வரன் தலைமையிலான பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள், குடும்பநல உத்தியோகத்தர்கள் ஈடுபட்டுள்ளனர்.

கல்முனை வடக்கு சுகாதாரப் பிராந்தியத்திற் குட்பட்ட கல்முனை, பாண்டிருப்பு, பெரியநீலாவணை, துறைவந்தியமேடு, சேனைக்குடியிருப்பு, நற்பிட்டிமுனை ஆகிய கிராமங்களில் மூன்றாவது அலையில் இதுவரை 159 பேர் கொரோனா தொற்றுக்குள்ளாகியுள்ளனர்.

பிரதேசத்தில் தனிமைப்படுத்தப்பட்ட குடும்பங்களுக்கும், ஏற்கனவே கொரோனா தொற்றுக்குள்ளானவர்களோடு தொடர்புபட்டவர்களுக்கும் என நேற்று 44 பேருக்கு மேற்கொள்ளப்ட்ட அன்ரிஜன் பரிசோதனையில் பெரியநீலாவணையில் ஐவர், பாண்டிருப்பில் இருவர், கல்முனையில் ஒருவர், துறைவந்தியமேடு கிராமத்தில் ஒருவர் என 9 பேர் தொற்றுக்குள்ளாகியுள்ளனர்.

கல்முனை வடக்கில் கொரோனா தொற்றைக் கட்டுப்படுத்துவதற்கு பொதுமக்கள் சுகாதாரப் பிரிவினருக்கு பூரண ஒத்துழைப்பு வழங்குமாறும், சுகாதார நடைமுறைகளை இறுக்கமாக பின்பற்றுமாறும் கல்முனை வடக்கு பிராந்திய சுகாதாரப் பணிமனை வேண்டுகோள் விடுத்துள்ளது.

# கலைஞர்களுக்கான வருடாந்த கொடுப்பனவு வழங்கிவைப்பு!



(சர்ஜூன் லாபீர்)

கல்முனை பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட கலைஞர்களுக்கான வருடாந்த உதவிக் கொடுப்பனவுகள் வழங்கிவைக்கும் நிகழ்வு நேற்று கலாசார அபிவிருத்தி உத்தியோகத்தர் எம்.ஹிபான் தலைமையில் பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

இந்நிகழ்வுக்கு பிரதம அதிதியாக கல்முனை பிரதேச செயலாளர் ஜே.லியாக்கத் அலி, கௌரவ அதிதிகளாக சமுர்த்தி தலைமைப்பீட முகாமையாளர் ஏ.ஆர்.எம்.சாலிஹ், அம்பாறை மாவட்ட கலாசார உத்தியோகத்தர் எம்.எம்.றிம்சான், சமுர்த்தி உதவி முகாமையாளர் எஸ்.எல்.ஏ.அஸீஸ், கலைஞர் சோலைக்கிளி, யூ.எல் அத்தீக் உட்பட கலைஞர்கள் பலர் கலந்துகொண்டனர்.

# புன்னக்குடாவில் அமைக்கப்பட்டுவரும் முதலீட்டு வலயத்துக்கு வியாழேந்திரன் – இந்திய முதலீட்டாளர்கள் நேரடி விஜயம்

(ந.குகதர்சன்)

மட்டக்களப்பு – ஏறாவூர்ப்பற்று செங்கலடி பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட புன்னக்குடா பகுதியில் அமைக்கப்பட்டுவரும் முதலீட்டு வலயத்தை (கைத்தொழில் பூங்கா) நேற்று முன்தினம் இராஜாங்க அமைச்சர் எஸ்.வியாழேந்திரன், பிரதமரின் இணைப்புச் செயலாளர் செந்தில் தொண்டமான் மற்றும் இந்திய முதலீட்டாளர்கள் ஆகியோர் நேரில் சென்று பார்வையிட்டனர்.

புன்னக்குடா பகுதியில் 265 ஏக்கர் நிலப்பரப்பில் மிகப்பெரிய கைத்தொழில் பூங்கா நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. இந்நிலையில், வேலைகளை அவதானித்து இடங்களையும் இராஜாங்க அமைச்சர் எஸ்.வியாழேந்திரன், பிரதமரின் இணைப்புச் செயலாளர் செந்தில் தொண்டமான் மற்றும் இந்திய முதலீட்டாளர்கள் நேரில் சென்று பார்வையிட்டனர்.

இதன்போது கருத்து தெரிவித்த இராஜாங்க அமைச்சர் எஸ்.வியாழேந்திரன்,

புன்னக்குடா பகுதியில் 265 ஏக்கர் நிலப்பரப்பில் மிகப்பெரிய கைத்தொழில் பூங்கா நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. பல முதலீட்டாளர்களை சந்தித்துக்கொண்டிருக்கின்றோம். தொடர்ச்சியாக நாம் முதலீட்டாளர்களுடன் சந்திப்பை ஏற்படுத்திவருகின்றோம்.

கடந்த வாரம் நாம் மேற்கொண்ட பேச்சுவார்த்தையின் பிரகாரம் சில இந்திய முதலீட்டாளர்கள் மட்டக்களப்பு மாவட்டத்திற்கு வருகை தந்துள்ளனர். அவர்களையும் இந்த முதலீட்டு வலயத்தில் முதலீடுசெய்யுமாறு கோரியுள்ளோம். இதன்மூலம் எமது இளைஞர் யுவதிகளுக்கு வேலைவாய்ப்புகளை பெறமுடியும்.

கடந்த அரசில் நாம் மூடியுள்ள தொழிற் சாலையையாவது திறக்கவேண்டும் என நாடாளுமன்றில் பேசினோம். பல கலந்துரையாடல்களை மேற்கொண்டோம். எல்லாம் காற்றில் பறக்கவிட்ட செய்தியாகவே உள்ளது.

முதலீட்டாளர்கள் இத்திட்டத்தில் தமது முதலீடுகளை செய்யமுடியும். படுவான் கரையிலும் இவ்வாறான திட்டங்களை மேற்கொள்ளவுள்ளோம். எங்களுக்கு அரசாங்கம் போதியளவு ஆதரவை வழங்குகின்றனர்.

போக்குவரத்து வசதிகளை மேம்படுத்திக் கொண்டிருக்கின்றோம். வருகின்ற முதலீட்டாளர்கள் திருப்தி தெரிவித்துள்ளனர். பொருட்களை ஏற்றுமதி செய்கின்ற வேலைகள் வருகின்ற வருடம் ஆரம்பமாகும் என்ற நம்பிக்கை எமக்குள்ளது.

# கிழக்கு மாகாண அரச நிறுவனங்களின் வளாகங்களை வளமான விவசாயத் தோட்டமாக்க ஆளுநர் பணிப்பு

(ஹஸ்பர் ஏ ஹலீம்)



திருகோணமலையில் நேற்று முன் தினம் நடைபெற்ற சேதனப் பசளை தயாரிப்பு தொடர்பிலான பயிற்சிப் பட்டறையில் மாகாண பிரதம செயலாளருக்கு கிழக்கு மாகாணத்திலுள்ள அனைத்து அரச நிறுவனங்களின் வளாகங்களையும் வளமான விவசாயத் தோட்டமாக மாற்றுமாறு கிழக்கு மாகாண ஆளுநர் அநுராதா யஹம்பத் அறிவுறுத்தினார்.

திருகோணமலை மாவட்ட விவசாய கமநல அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், விவசாய போதனாசிரியர்கள் மற்றும் விவசாய ஆராய்ச்சி உற்பத்தி உதவியாளர்கள் போன்றோர்களுக்கு இடம்பெற்ற பயிற்சிப் பட்டறையில் இதுபோன்ற நடவடிக்கைகள் விரைவில் தொடங்கப்பட வேண்டும் என்று அவர் மேலும் கூறினார்.

இதில், சேதனப் பசளை தயாரித்தல், சூழல் பாதுகாப்பு விவசாய உற்பத்தி உள்ளிட்ட பல விடயங்கள் குறித்து அதிகாரிகளுக்கு விளக்கமளிக்கப்பட்டது. மேலும் குறித்த திட்டம் ஐந்து நாள் பயிற்சிப் பட்டறைகளாக நடத்த திட்டமிடப்பட்டுள்ளது. மட்டக்களப்பு மற்றும் அம்பாறை மாவட்டங்களிலுள்ள அதிகாரிகளுக்கும் அடுத்த வாரம் நிலையான விவசாயம் குறித்து பயிற்சி அளிக்கப்படும்.

இவ் விவசாயம் தொடர்பிலான அதிகாரிகள் மூலம்தான் நாட்டில் சேதன உரம் தொடர்பான விவசாய உற்பத்தியை பிரபலப்படுத்த ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ எடுத்த முடிவை கிராமப்புற மக்களுக்கு எளிதில் தெரிவிக்க முடியும்.

அவர்களுக்குத் தேவையான பயிற்சியையும் அறிவையும் வழங்குவதன் மூலம் சேதன உர விவசாயம் குறித்து விவசாயிகளுக்கு அறிவுறுத்துவது எளிதாக இருக்கும் என்றும் சரியான ஆலோசனையுடன் விவசாயிகள் விவசாயத்திலிருந்து அதிக இலாபங்களைப் பெறமுடியும் என்றும் கூறினார்.

இந்நிகழ்வில் மாகாண பிரதம செயலாளர் துசித பி.வனிகசிங்க, மாகாண விவசாய அமைச்சின் செயலாளர் கலாமதி பத்மராஜா, ஆளுநரின் செயலாளர் எல்.பி.மதநாயக்க, மாகாண விவசாய பணிப்பாளர் கலாநிதி ஹுசைன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

தமிழன்
www.thamilan.lk

# வணிக உலகம் Business world

## தேயிலை விளைச்சல் 2021இற்குள் 30% ஆகவும் 2022 மார்ச் மாதத்துக்குள் 50% ஆகவும் வீழ்ச்சி அடையுமென சிறு தேயிலை தோட்ட உரிமையாளர்கள் மதிப்பிடுகின்றனர்



தேயிலை விளைச்சல் 2021இற்குள் 30% ஆகவும் 2022 மார்ச் மாதத்திற்குள் 50% ஆகவும் வீழ்ச்சியடையுமென சிறு தேயிலை தோட்ட உரிமையாளர்கள் மதிப்பிடுகின்றனர்

சர்ச்சைக்குரிய இரசாயன உரங்களை இறக்குமதி செய்வதற்கான தடை விதிக்கப்பட்டுள்ளதன் காரணமாக ஏற்பட்டுள்ள கடுமையான உர பற்றாக்குறைக்கு திட்டவட்டமான தீர்வு இல்லாததனால் 2021ஆம் ஆண்டின் இறுதியில், தேயிலை விளைச்சல் கடந்த ஆண்டை விட 30% வீழ்ச்சியடையும் என்றும், மார்ச் 2022இற்குள் மொத்த தேயிலை உற்பத்தி பாதியாகிவிடும் எனவும் இலங்கையில் சிறு தேயிலை தோட்ட உரிமையாளர்கள் மதிப்பிடுகின்றனர்.

இலங்கையில் மொத்த தேயிலை உற்பத்தியில் 70 வீதத்துக்கும் அதிகமான பங்களிப்பை வழங்கும் சிறு தேயிலை தோட்டத்துறை, 5,00,000 தோட்ட உரிமையாளர்களைக் கொண்டுள்ளது, இது 1,38,900 ஹெக்டேயர், 14 மாவட்டங்கள், 123 மாவட்ட செயலகங்கள் மற்றும் 3,692 கிராமசேவகர் பிரிவுகளைக் கொண்டுள்ளது. அத்துடன், இந்தத் துறையானது நாட்டிலுள்ள கிராமப்புறங்களிலுள்ள மக்களில் சுமார் 20%மான 5,000இறகும் மேற்பட்டவர்களின் கிராமப்புற பொருளாதாரங்களுடன் இந்தத் துறை ஆழமாக இணைக்கப்பட்டுள்ளது.

அனைத்து இலங்கை சிறு தேயிலை தோட்ட அபிவிருத்தி சங்கத்தின் தலைவர் கே.எல். குணரத்ன கருத்து தெரிவிக்கையில், நாங்கள் அரசாங்கத்தின் செயற்றிட்டங்களுக்கு ஆதரவளிக்க மிகவும் ஆர்வமாக உள்ளோம். ஆனால், அதை அடைவதற்கு, அனைத்து சிறு தேயிலைத் தோட்ட உரிமையாளர்களின் நலனுக்கும், புலத்தின் முன்னேற்றத்திற்கும் உத்தரவாதமளிக்கும் ஒரு நடைமுறைத் திட்டம் நமக்குத் தேவை. பல சிறு தோட்ட உரிமையாளர்கள் சுமார் இரண்டு மாதங்களாக உர தட்டுப்பாட்டை அனுபவித்து வருகின்றனர். உர இறக்குமதி தடை விதிக்கப்படுவதற்கு முன்பே மற்றவர்கள் உரங்களைப் பெறுவதில் பல்வேறு சிக்கல்களை எதிர்கொண்டுள்ளனர். இதன் விளைவாக, 2021ஆம் ஆண்டுக்கான தேயிலைத் தோட்டங்களுக்கு உரங்கள் முறையாக பயன்படுத்தப்படவில்லை. என அவர் தெரிவித்தார்.

எங்கள் தொழில்துறையில் பலருக்கு தேயிலையே அவர்களின் ஒரே குறிப்பிடத்தக்க வாழ்வாதாரமாகும். கொவிட்-19 தொற்றுநோய் தாக்கத்தின் விளைவாக வாழ்க்கைச்செலவு கடுமையாக உயர்ந்துவருவதால் இந்தச் சமூகங்கள் இப்போது கடுமையான அழுத்தத்திற்கு உள்ளாகியுள்ளன. குழந்தைகளுக்குத் தேவையான உணவு, மருந்து மற்றும் கல்விக்கு பணம் செலுத்த இந்தத் துறையைச் சார்ந்திருக்கும் குடும்பங்களைச் சேர்ந்த சுமார் 1.5 மில்லியன் மக்கள் இங்கு உள்ளனர். தற்போதைய உர பற்றாக்குறையால், சிறு தேயிலைத் தோட்ட உரிமையாளர்கள் கடுமையான நெருக்கடியை எதிர்கொள்கின்றனர், அதற்கான தீர்வுக்காக போராட்டங்களைச் செய்கிறார்கள். இது விரைவில் தீர்க்கப்படும் என்ற உத்தரவாதத்தை அவர்களுக்கு வழங்க வேண்டுமென எதிர்பார்க்கின்றனர்.

தேயிலை உற்பத்தி வீழ்ச்சியடைய வாய்ப்புள்ளதால் சிறு தேயிலை தோட்ட உரிமையாளர்களின் வருமானம் குறைவது இலங்கையின் கிராமப்புற பொருளாதாரத்தில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தும் என்றும் அவர் கூறினார்.

இந்தத் துறையில் போக்குவரத்துமுதல் தேயிலை வாங்குபவர்கள்வரை பல இரண்டாம் மற்றும் மூன்றாம் மட்ட துறைகள் உள்ளன. தேயிலைத் துறையின் வீழ்ச்சி இந்த அனைத்து துறைகளையும் பாதிக்கும். இந்த நிலைமையை நிர்வகிக்க முறையான அமைப்பு அல்லது திட்டம் இல்லாவிடின், கிராமப்புற பொருளாதாரம் நிச்சயமாக வீழ்ச்சியடையும் என குணரத்ன சுட்டிக்காட்டினார்.

கனிம உரங்களை இறக்குமதிசெய்வதற்கும் பயன்படுத்துவதற்கும் முழுமையான தடை அறிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து, நாடு முழுவதும் உரங்கள் பற்றாக்குறை இருப்பதாகவும், தற்போதுள்ள உர இருப்புகளின் விலை கடுமையாக உயர்ந்துள்ளதாகவும் செய்திகள் வெளியாகியுள்ளன. நாட்டின் ஒட்டுமொத்த விவசாய மற்றும் பெருந்தோட்ட பொருளாதாரத்தை முழுமையான கனிம விவசாயத்துடன் கூடிய பொருளாதாரமாக மாற்றுவதற்கான முடிவின் ஒரு பகுதியாக இந்த தடை அறிவிக்கப்பட்டுள்ளது.

அத்தகைய எதிர்கால எண்ணத்தை எவ்வாறு அடைய முடியும் என்பதற்கான கோட்பாடு இல்லாதபோது, உணவுப் பாதுகாப்புப் பிரச்சினை குறித்து பல்வேறு விமர்சனங்கள் எழுந்து வருகின்றன, மேலும் ஏற்றுமதி பயிர்களின் அளவு வீழ்ச்சியடைந்து வருவது ஏற்கனவே ஒரு பெரிய பொருளாதார நெருக்கடிக்கு வழிவகுக்கும்.

தேயிலை ஆராய்ச்சி நிறுவனத்தின் பரிந்துரைகளின் அடிப்படையில் தேயிலைச் செடியின் வளர்ச்சி கட்டத்திற்கேற்ப பல்வேறு வகையான குறிப்பிட்ட உரங்களை எவ்வாறு பயன்படுத்துவது என்பதை குணரத்ன விளக்கினார். விளைச்சலுக்கு முன்னர் வேர் அமைப்பை வலுப்படுத்தவும் வளர்க்கவும் தேயிலை செடியின் உடற்பகுதியை வலுப்படுத்தவும் சிறப்பு உரங்கள் பயன்படுத்தப்படுகின்றன. பொதுவாக சிறு தேயிலை தோட்டத் தொழில்துறையில், தேயிலை புதர்களிலிருந்து ஒரு மாதத்திற்கு 3-4 முறை கொழுந்துகள் பறிக்கப்படுகின்றன, பின்னர் தேயிலை செடிக்கு அடுத்த விளைச்சல்வரை அதனைப் பராமரிக்க மேலதிக கவனிப்புகள் தேவைப்படுகின்றன.

உரங்களின் பற்றாக்குறை தேயிலை கொழுந்துகள் மஞ்சள் நிறமாக மாறி அவற்றின் தரத்தை இழக்கின்றன. அவை மிகவும் கடினமானவை, அந்த கொழுந்துகளை பறிப்பது கடினம். நாம் கரிம உரங்களுக்கு மாற வேண்டுமானால், சிறு தேயிலைத் தோட்ட விவசாயிகளுக்கு இந்த உத்திகள் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்த நிறைய வேலை செய்ய வேண்டும். தேயிலைத் தொழிலின் வருமானத்தை மேலும் குறைக்காதபடி கரிம உர பயன்பாட்டு உத்திகளை செயல்படுத்துவதில் அதிக முதலீடு செய்யவேண்டிய அவசியமும் உள்ளது. இரசாயன உரங்கள் மீதான தடையால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு நிவாரணம் வழங்க, சிறு தேயிலைத் தோட்ட உரிமையாளர்களையும் சேர்த்துக்கொள்வது அவசியம்.

முன்னதாக, அவர்கள் சிறிய தேயிலை தோட்ட உரிமையாளர்களுக்கு கூட கரிம விவசாய முறையை அறிமுகப்படுத்த முயன்றனர், ஆனால், அவர்களுக்கு ஒருபோதும் ஒரே விளைச்சல் கிடைக்கவில்லை. அரசாங்க நிபுணர்கள் சொல்வது உண்மை என்றால், கரிம விவசாய செய்கை மூலம் நீண்டகால ஆரோக்கியமான வாழ்க்கையை உறுதி செய்வது நமக்கு மிகவும் முக்கியம். சரியான விளைச்சல் இல்லாத காரணத்தால், இந்த குடும்பங்கள் இன்னும் உணவு இல்லாமல் பல்வேறு நெருக்கடிகளில் உள்ளன. அதாவது அவர்களின் உடல்நிலையும் பாதிக்கப்பட்டு ஆபத்தான நிலையில் உள்ளது என குணரத்ன தெரிவித்தார்.

## சிங்ஹகிரியின் புதிய காட்சியறைகள் இப்போது குருநாகல் - மஹரகமை மற்றும் மொரட்டுவையில்




இலங்கையின் பிரதானமான முக்கிய நகரங்களில் சிங்ஹகிரி நிறுவனத்தின் புதிய 3 கிளைகள் அன்மையில் திறந்துவைக்கப்பட்டன. அதன்படி புதிய காட்சியறைகள் மூன்றும் 2021 ஜனவரி மாதத்தில் மொரட்டுவை நகரத்திலும், மார்ச் மாதத்தில் மஹரகமை நகரத்திலும், மே மாதத்தில் குருநாகல் நகரத்திலும் திறந்துவைக்கப்பட்டன. இந்த சகல காட்சியறைகளும் வணிக ரீதியாக மிகவும் முக்கியமான இடத்தில் அமைந்துள்ளதோடு, மிகவும் எளிமையாக வாடிக்கையாளர்களுக்கு அணுகக்கூடிய வகையில் உள்ளதோடு, தேவையான சகல பொருட்களும் ஒரே கூரையின்கீழ் பெற்றுக்கொள்ள முடியும். அதன் அடிப்படையில் நாடளாவிய ரீதியில் 100இற்கும் அதிகமான சில்லறை காட்சியறைகளும், 12 பிளாஸா காட்சியறைகளும் இயங்கி வருகின்றது. இவ்வாறு இயங்கும் பிளாஸா காட்சியறை வலையமைப்பானது சிங்ஹகிரியின் பிரதான காட்சியறைகளாகும். இவ்வாறு மேற்கொள்ளப்படும் விரிவாக்க திட்டங்களின் மூலம் சிங்ஹகிரி நாமத்தின்கீழ் பலவித புதுமையான உற்பத்திகளை தொடர்ந்து விரிவாக்கம் செய்வதற்கு எதிர்பார்க்கிறது.

குளிர்சாதனப் பெட்டிகள், வளிச்சீராக்கிகள், சலவை இயந்திரங்கள், தொலைக்காட்சிகள், கையடக்கத் தொலைபேசிகள், கணினிகள், வீட்டுப்பாவனை இலத்திரனியல் மின் உற்பத்திகள், சமையலறை உற்பத்திகள் உள்ளிட்ட மற்றும் பல உற்பத்திகளை இங்கே உங்களுக்கு கொள்வனவுசெய்ய முடியும். சிங்ஹகிரி அறிமுகம் செய்துள்ள கோத்ரேஜ் விரோஷீல்ட் உற்பத்திகள் UV-C தொழில்நுட்பத்தில் நீங்கள் அன்றாடம் பயன்படுத்தும் உபகரணங்களில் படிந்துள்ள வைரஸ் மற்றும் பாக்டீரியாக்களை 99% அழிக்கிறது. மரக்கறி, பணத்தாள்கள், சில்லறை உற்பத்திகள், கையடக்கத் தொலைபேசிகள், முகக்கவசங்கள், பணப்பைகள், வாகனத் திறப்பு மற்றும் ஹெட்போன் போன்றவற்றை கோத்ரேஜ் விரோஷீல்ட் மூலம் கிருமிநீக்கம் செய்யமுடியும்.

Samsung, Hisense, HP, Vivo, Oppo, Havells, Godrej, Realme மற்றும் Ferre போன்ற உலகின் முன்னணி உற்பத்திகளை சிங்ஹகிரி காட்சியறைகளில் இப்போது உங்களுக்கு பெற்றுக்கொள்ள முடியும். அதேபோல் Singhagiri.lk என்ற இணையதளத்திற்கு பிரவேசித்து ஒன்லைன் மூலம் மிகவும் இலகுவாக பெற்றுக்கொள்ளும் வசதி உள்ளது.

## Huawei Technologies Lanka நிறுவனம் Great Place to Work இனால் இலங்கையில் பணிபுரிய சிறந்த இடங்களில் ஒன்றாக சான்றளிக்கப்பட்டுள்ளது

ICT தீர்வுகளில் முன்னணி சேவை வழங்குநரான Huawei Technologies Lanka நிறுவனமானது, 2021ஆம் ஆண்டுக்கான இலங்கையின் 40 சிறந்த பணியிடங்களில் ஒன்றாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது. Great Place to Work நிறுவனத்தின் சுயாதீன ஆய்வாளர்களால் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுத் தரவுகளின் அடிப்படையில் ஒரு சிறந்த பணியிடமாக சான்றளிக்கப்பட்டுள்ளது. Great Place to Work இனால், Huawei Technologies Lanka நிறுவனத்தின் ஊழியர்களிடையே மேற்கொள்ளப்பட்ட இரகசியம் பேணப்பட்ட ஆய்வில், ஊழியர்களால் வழங்கப்பட்ட விரிவான மதிப்பீடுகளின் அடிப்படையில் இந்த நற்சான்றிதழை அது பெற்றுள்ளது.




Huawei Sri Lanka பிரதான நிறைவேற்று அதிகாரி லியாங் யி இது தொடர்பில் தெரிவிக்கையில், "வேலைசெய்ய சிறந்த இடமாக நாம் அங்கீகரிக்கப்பட்டுள்ளமையானது எமக்கு மகிழ்ச்சியளிக்கிறது. Huawei என்பது ஒரு சர்வதேச நிறுவனமாகும். இது மூன்று தசாப்தங்களுக்கு முன்னர் நிறுவப்பட்ட ஒன்று என்பதோடு, நாம் ICT துறையில் முன்னணியில் இருப்பதன் காரணமாக, 170 இற்கும் மேற்பட்ட நாடுகளில் தொழில்நுட்ப முன்னேற்ற நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகிறோம். இந்த வெற்றிக்குக் காரணம், அர்ப்பணிப்பு மற்றும் கடின உழைப்பைக்கொண்ட எமது ஊழியர்களைத் தவிர வேறு யாருமில்லை" - என்றார்.

Great Place to Work நிறுவனத்தின் கருத்தின் படி, "ஒரு சிறந்த பணியிடம் என்பதானது, அதன் ஊழியர்கள் யார், அவர்கள் நிறுவனத்திற்காக என்ன செய்கிறார்கள் என்பதல்ல. அவர்களது தலைவர்கள் மீது அவர்கள் எவ்வாறு நம்பிக்கை கொண்டுள்ளனர், அவர்கள் பணிபுரியும் நபர்களுடன் எவ்வாறு மகிழ்ச்சியாக உள்ளனர், அவர்கள் எதை செய்கிறார்களோ அது தொடர்பில் பெருமை கொள்வது போன்ற ஒரு நேரிய அனுபவத்தின் அடிப்படையிலானது. மரியாதை, நம்பிக்கை மற்றும் நியாயத்தை வளர்க்கும் ஓர் அமைப்பாக Huawei Technologies Lanka அவர்களின் ஊழியர்களால் அங்கீகரிக்கப்பட்டுள்ளமையானது ஒரு பெருமைக்குரிய விடயமாகும்."

மனித வலுவின் மூலதனத்தின் அடிப்படையில், உள்ளூர் ICT திறமையாளர்கள், டிஜிட்டல் பொருளாதாரத்தை இயக்குவதற்கான முக்கிய கூறுகளில் ஒன்றாக காணப்படுகின்றனர் என்று Huawei நம்புகிறது. அவர்கள் உலகளவில் அங்கீகாரம் பெற்றவர்கள் என்பதுடன், உள்ளூர் மற்றும் சர்வதேச ICT தொழில்துறைக்குத் தேவையான சர்வதேச அளவில் பாராட்டுக்குரிய தகுதிகளைக்கொண்டவர்களுமாவர். பல ஆண்டுகளாக, இலங்கையில் காலூன்றியுள்ள Huawei Sri Lanka நிறுவனம், ICT திறமையாளர்களை வளர்ப்பதில் மிக ஆழமாக கவனம் செலுத்தி வருகிறது. எதிர்காலத்திற்கான விதைகள் (Seeds for the Future), சிறந்த பல்கலைக்கழகங்களுடன் இணைந்து கூட்டு கண்டுபிடிப்பு ஆய்வகங்கள், உள்ளூர் பங்காளிகளுக்கு தொழில்துறை ரீதியிலான ICT பயிற்சிகள் போன்ற முன்முயற்சிகளை மேற்கொண்டு வருவதன் மூலம் இலங்கையானது, பிராந்திய ரீதியிலும், சர்வதேச அளவிலும் ICT துறையில் முன்னேற்றமடைய Huawei உதவி வருகின்றது.

அது மாத்திரமன்றி, இலங்கையிலுள்ள Huawei நிறுவனம், உள்நாட்டு ஊழியர்களுக்கு பல்வேறு தொழில் மேம்பாட்டு பாதைகளையும் வழங்குகிறது. நிர்வாக ரீதியான பணிக்கான பயிற்சிகள், ஒருவருக்கொருவர் வழிகாட்டுதல் போன்ற விடயங்கள் மற்றும் ஏனைய முறைகள் மூலம் உள்ளூர் ஊழியர்களுக்கு அதிக பொறுப்புகள் வழங்கப்படுவதோடு, அவர்களின் தொழில் வளர்ச்சிக்கான வாய்ப்புகளும் இதன் மூலம் துரிதப்படுத்தப்படுகின்றன.

கடந்த ஆண்டுகளில், Huawei Sri Lanka நிறுவனமானது, Great Place to Work மூலம் 'வேலை செய்ய சிறந்த இடம்' எனும் கௌரவத்தை மீண்டும் மீண்டும் பெற்று வருகின்றது என்பது குறிப்பிடத்தக்கது. உலகளாவிய சர்வதேச அமைப்பு எனும் வகையில் Huawei நிறுவனமானது, இலங்கை ஊழியர்களின் பணியாளர்களுக்கு அதிகாரமளித்தல் திட்டங்கள், திட்ட முகாமைத்துவம் மற்றும் மேம்பாட்டுத் திட்டங்கள், 20,000இற்கும் மேற்பட்ட ஒன்லைன் / ஓவ்லைன் பயிற்சி வகுப்புகள் மற்றும் ஊழியர்களின் நம்பிக்கையுடன் ஓர் உயர்ந்த நிறுவனமாக தன்னை மேலோங்கச் செய்து, அவர்களிடையே போட்டித்தன்மை மற்றும் திறன்களை மேம்படுத்தி வருகிறது. 2018ஆம் ஆண்டில், Huawei நிறுவனமானது, 'ஒருவருக்கொருவர் வழிகாட்டல்' எனும் திட்டத்தை இலங்கையில் அறிமுகப்படுத்தியது. அதனடிப்படையில் இலங்கையிலுள்ள முகாமைத்துவக் குழு உறுப்பினர்கள் தங்கள் பணி தொடர்பான அறிவை உரிய உள்ளூர் முகாமையாளர்களுக்கு முறையான மற்றும் முறைசாரா வழிகள் மூலம் பரிமாறிக் கொள்வார்கள். இதன்மூலம் அவர்கள் நிறுவனத்தில் முகாமைத்துவ ரீதியிலான திறன்களை மேம்படுத்திக்கொள்வார்கள்.

இலங்கையிலுள்ள Huawei நிறுவனம், தொலைத்தொடர்பு வலையமைப்புகள், தகவல் தொடர்பாடல், ஸ்மார்ட் சாதனங்கள் மற்றும் கிளவுட் சேவைகள் ஆகிய நான்கு முக்கிய பிரிவுகளில், ஒருங்கிணைந்த தீர்வுகளுடன் 20 ஆண்டுகளுக்கும் மேலாக செயற்பட்டு வருகிறது. அத்துடன், உள்நாட்டிலுள்ள பிரதான தொலைத்தொடர்பு வலையமைப்புகள், அரச மற்றும் தொழில்துறை வாடிக்கையாளர்களுடன் விரிவான மற்றும் ஒத்துழைப்புடனான செயற்பாடுகளையும் அது மேற்கொண்டு வருகின்றது.

பல ஆண்டுகளாக இலங்கையில் ICT திறமையாளர்களின் கூட்டமொன்றை உருவாக்குவது தொடர்பான பல்வேறு நடவடிக்கைகள் மூலம் Huawei தொடர்ந்தும் அவர்களை ஊக்குவித்து வருகிறது.

# உலக செய்திகள்



## அதிகரிக்கும் கொரோனா: ஒலிம்பிக்குக்கு சிக்கலா?

ஜப்பான் தலைநகர் டோக்கியோவில் ஒலிம்பிக் போட்டி தொடங்கவுள்ள நிலையில், மீண்டும் கொரோனா தொற்று அதிகரித்துள்ளமை அந்நாட்டு அரசுக்கு பாரிய சவாலை ஏற்படுத்தியுள்ளது.

டோக்கியோவில் ஒலிம்பிக் போட்டிகள் ஜூலை 23ஆம் திகதி தொடங்குகின்றன. கடந்த ஆண்டே நடைபெறுவதாக இருந்த போட்டி கொரோனா தொற்று பரவல் காரணமாக ஒத்திவைக்கப்பட்டது.

ஆரம்பம் முதல் கொரோனா தொற்று பரவலின் மத்தியில் ஒலிம்பிக் போட்டியை நடத்துவதற்கு அந்நாட்டு மக்கள் எதிர்ப்புத் தெரிவித்து வந்தனர். கொரோனா பரவலைக் கட்டுப்படுத்தாமல் அரசு விளையாட்டுப் போட்டியில் கவனம் செலுத்துவதாக குற்றச்சாட்டை எழுப்பினர்.

இந்நிலையில், ஒலிம்பிக் போட்டி தொடங்க இன்னும் ஒருவார காலமே உள்ள நிலையில், டோக்கியோவில் மீண்டும் கொரோனா தொற்று பாதிப்பு அதிகரிக்கத் தொடங்கியுள்ளது. கடந்த ஜனவரி மாதம்முதல் தற்போதுவரை டோக்கியோவில் பதிவான அதிகபட்ச கொரோனா பாதிப்பு எண்ணிக்கை 1,485ஆக உள்ள நிலையில் புதன்கிழமை 1149 புதிய பாதிப்புகள் பதிவுசெய்யப்பட்டுள்ளமை அந்நாட்டு அரசுக்கு கவலையை ஏற்படுத்தியுள்ளது.

ஒலிம்பிக் போட்டியை முன்னிட்டு பல்வேறு நாட்டு விளையாட்டு வீரர்கள் டோக்கியோவிற்கு வருகை புரிந்துவரும் சூழலில் அவர்களது பாதுகாப்பை உறுதிசெய்ய ஜப்பான் அரசு தீவிரம் காட்டி வருகிறது.

## சிகிச்சைகளுக்கு பின் வாடிகன் திரும்பினார் போப் பிரான்சிஸ்



சிகிச்சைகளின் பின்னர் போப் பிரான்சிஸ் நேற்றுமுன்தினம் வத்திக்கானுக்கு திரும்பியுள்ளார்.

கத்தோலிக்க திருச்சபையின் தலைவர் போப் ஆண்டவர் பிரான்சிஸ் (வயது 84), பெருங்குடல் பிரச்சினை காரணமாக வயிற்று வலியால் அவதிப்பட்டு வந்த நிலையில், இத்தாலி தலைநகர் ரோமிலுள்ள கெமல்லி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார்.

அங்கு அவருக்கு கடந்த 4ஆம் திகதி அறுவை சிகிச்சை நடந்தது. அதன் பின்னர் அவருக்கு லேசான காய்ச்சல் ஏற்பட்டது. பின்னர் காய்ச்சல் குறைந்தது. இருப்பினும் அவர் தொடர்ந்து மருத்துவமனையில் டொக்டர்களின் கண்காணிப்பில் இருந்து வந்தார். அவர் மருத்துவனையிலேயே தினமும் பிரார்த்தனை மற்றும் ஞாயிறு வழிபாட்டை நடத்தினார்.

இந்நிலையில் அறுவை சிகிச்சை நடந்த 10 நாட்களுக்கு பின்னர் போப் ஆண்டவர் பிரான்சிஸ் நேற்றுமுன்தினம் வத்திக்கானுக்கு திரும்பியுள்ளார்.

கெமல்லி மருத்துவமனையிலிருந்து தனது சொகுசு காரில் புறப்பட்ட போப் ஆண்டவர், வாடிகன் செல்வதற்கு முன்பாக ரோம் நகரிலுள்ள சாண்டா மரியா பேராலயத்துக்கு சென்று வழிபாடு நடத்தினார். பொதுவாக அவர் வெளிநாடு பயணங்களை முடித்து விட்டு ஊர் திரும்பும்போது இந்த பேரால யத்தில் வழிபாடு நடத்துவது வழக்கம். போப் ஆண்டவர், எதிர்வரும் செப்டம்பர் 12 முதல் 15 வரை ஹங்கேரி மற்றும் ஸ்லோ வாக்கியா நாடுகளுக்கு பயணம் மேற் கொள்ள திட்டமிட்டுள்ளமை குறிப்பிடத் தக்கது.

## ஆப்கான் - பாக். எல்லையில் பறக்கும் தலிபான் கொடி

### முக்கிய பகுதிகளை கைப்பற்றியது



ஆப்கானிஸ்தான் - பாகிஸ்தான் எல்லையில் முக்கிய பகுதிகளை கைப்பற்றிய தலிபான் தீவிரவாதிகள், தங்கள் கொடியை பறக்கவிட்டுள்ளனர்.

ஆப்கானிஸ்தானில் தீவிரவாதிகள் மற்றும் அரச படைகளுக்கு இடையே 20 ஆண்டுகளாக உள்நாட்டு யுத்தம் நடைபெற்று வருகிறது.

அரச படைகளுக்கு ஆதரவாக அமெரிக்கப் படைகளும் போரில் ஈடுபட்டு வருகின்றன. இந்நிலையில், ஆப்கானிஸ்தான் போரை நிரந்தரமாக முடிவுக்குக் கொண்டுவர அமெரிக்கா விரும்பியது. இதையடுத்து, கடந்த பெப்ரவரியில் அமெரிக்கா - தலிபான்கள் இடையே வரலாற்றுச் சிறப்புமிக்க ஒப்பந்தம் கையெழுத்தானது. அதில், செப்டம்பர் 11ஆம் திகதிக்குள் ஆப்கானிஸ்தானை விட்டு அமெரிக்கப் படைகள் வெளியேறும் என்றும் தெரிவிக்கப்பட்டது. அதன்படி, தங்கள் கட்டுப்பாட்டிலிருந்த பக்ரம் விமானத் தளத்திலிருந்து சில நாட்களுக்கு முன்பு அமெரிக்கப் படைகள் வெளியேறின.

இதனால் ஆப்கானிஸ்தானில் தலிபான் தீவிரவாதிகளின் ஆதிக்கம் அதிகரித்துள்ளது. ஆப்கானிஸ்தானின் வடமேற்கு பகுதியில் தஜிகிஸ்தானின் எல்லையையொட்டி அமைந்துள்ள படாக்ஸ்கான் மற்றும் கந்தகார் மாகாணங்களிலுள்ள நகரங்களை தலிபான்கள் கைப்பற்றினர். இந்நிலையில், பாகிஸ்தானின் சாமன் நகருக்கு எதிரே யுள்ள ஆப்கானிஸ்தானின் வெஷ் நக ரிலுள்ள எல்லையை தாங்கள் கைப்பற் றியுள்ளதாக தலிபான் தீவிரவாதிகள் வீடியோ வெளியிட்டுள்ளனர். அதில் ஆப்கானிஸ்தான் கொடியைவிட உயரத்தில் தலிபான் கொடி பறக்கவிடப்பட்டுள்ளது. அமெரிக்கர்கள் மற்றும் அவர்களின் கைப்பாவைகளின் கொடூரத்தின் 2 தசாப்தங்களுக்குப் பின்னர், வாயில் மற்றும் ஸ்பின் போல்டாக் மாவட்டம் தலிபான்களால் கைப்பற்றப்பட்டன என்று ஒருவர் தெரிவித்துள்ளார்.

தற்போது தலிபான்கள் கைப்பற்றியதாக கூறப்படும் பகுதி இரு நாட்டுக்கு இடையேயான எல்லை பகுதியாக இருந்துவருகிறது. குறித்த அந்த வழியூடாவே முக்கிய போக்குவரத்துகள் நிகழ்கின்றன. நாளொன்றுக்கு சுமார் 900 ட்ரெக்குகள் இந்தப் பாதையை கடக்கின்றன. இந்தப் பகுதி தற்போதும் தங்கள் கட்டுப்பாட்டில் இருப்பதாக ஆப்கானிஸ்தான் படைகள் கூறும் நிலையில், தலிபான்களின் கையே ஓங்கியுள்ளதாக குடிமக்கள் மற்றும் பாகிஸ்தான் அதிகாரிகளிடமிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

## 20 இலட்சம் கணக்குகளை முடக்கியது வட்ஸ்அப்




**உலகம் முழுவதும் சர்ச்சைக்குரிய சுமார் 80 இலட்சம் கணக்குகளை முடக்கியுள்ளதாக வட்ஸ்அப் நிறுவனம் அறிவித்துள்ளது. இதில் 20 இலட்சம் கணக்குகள் இந்திய வாடிக்கையாளர்களது என வட்ஸ்அப் நிறுவனம் தெரிவித்துள்ளது.**

**சுமார் 5 கோடிக்கும் அதிகமான வாடிக்கையாளர்களை இந்தியாவில் வைத்துள்ள வட்ஸ் அப் நிர்வாகத்திற்கு மே 15 முதல் ஜூன் 15 வரையிலான காலத்தில் பணமோசடி உள்ளிட்ட நூற்றுக்கணக்கில் முறைப்பாடுகள் கிடைத்துள்ளன.**

**இதையடுத்து தம்மிடமுள்ள தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி இந்தியாவில் 20 இலட்சம் கணக்குகளை முடக்கிய வட்ஸ்அப், உலகம் முழுவதும் 80 இலட்சம் கணக்குகளை முடக்கியுள்ளதாகத் தெரிவித்துள்ளது.**

**சமூக ஊடகங்கள் முறைப்பாடுகளை பெற இந்தியாவில் அதிகாரி களை நியமிக்கவேண்டும் என்று அண்மையில் இந்திய மத்திய அரசு டிஜிட்டல் சட்டத்தை இறுக்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது.**

## பெல்ஜியம் - ஜேர்மன் - சுவிட்சர்லாந்தில் கடும் மழை - வெள்ளம்: 70 பேர் பலி



பெல்ஜியம், ஜேர்மனி, நெதர்லாந்து உள்ளிட்ட ஐரோப்பிய நாடுகளில் தொடர் மழையால் ஆறுகளில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டு வீடுகளை வெள்ளம் சூழ்ந்துள்ளது. இதுவரை 70இற்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ள நிலையில், நூற்றுக்கணக்கானோர் காணாமல்போயுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஐரோப்பாவின் மேற்குப் பகுதியில் இரண்டு நாட்களாக கனமழை பெய்து வருகிறது. ஜேர்மனியின் மேற்குப் பகுதியிலுள்ள Rhineland Palatinate மாகாணத்தில் பெய்த கடும் மழையால் வீதிகளும் கட்டடங்களும் உருக்குலைந்து கிடக்கின்றன. வீட்டின் மேற்கூரையில் தஞ்சமடைந்த மக்களை மீட்கும் பணியில் இராணுவத்தினர் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். ஜேர்மனியில் வெள்ளத்தில் சிக்கி ஏறத்தாழ 58 பேர் உயிரிழந்துள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

பெல்ஜியத்தில் வாலோனியா மாகாணம் வெள்ளக் காடாக காட்சியளிக்கிறது. வெள்ளத்தில் சிக்கியவர்களை மீட்க இத்தாலி விமானப்படை விமானங்கள் விரைந்துள்ளன. லெய்ஜ் (Lige) நகரம் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளது.

நெதர்லாந்து மற்றும் சுவிட்சர்லாந்து ஆகிய நாடுகளிலும் கடும் பாதிப்புகள் ஏற்பட்டுள்ளன. முக்கிய பகுதிகளை மழைநீர் சூழ்ந்ததால் பொதுமக்கள் வாகனங்கள் மூலம் பாதுகாப்பான இடங்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளனர்.

ஐரோப்பிய நாடுகளில் கனமழை மற்றும் வெள்ளத்துக்கு 70இற்கும் மேற்பட்டோர் உயிரிழந்தனர். பல இடங்களை வெள்ளம் சூழ்ந்துள்ள நிலையில், நூற்றுக்கணக்கானோர் மாயமானதாக தகவல் வெளியாகியுள்ளது.

## மத்திய பிரதேசத்தில் கிணற்றில் தவறி வீழ்ந்த குழந்தை: காப்பாற்ற முயன்றவர்கள் விபத்தில் சிக்கிய பரிதாபம்

### 3 பேர் உயிரிழப்பு; 20இற்கும் மேற்பட்டோர் காயம்; பலரின் நிலை கவலைக்கிடம்



மத்திய பிரதேசத்தில் குழந்தையை காப்பாற்ற முயன்று கிணற்றில் வீழ்ந்த கிராம மக்களை மீட்கும் பணிகள் தீவிரமாக நடைபெற்று வருகின்றன.

மத்திய பிரதேச மாநிலம் விதிஷா மாவட்டத்திலுள்ள கஞ்ச்பசோதா என்ற கிராமத்தில் குழந்தையொன்று கிணற்றில் தவறி வீழ்ந்துள்ளது. அந்தக் குழந்தையைக் காப்பாற்றுவதற்காக கிணற்றின் அருகில் கிராம மக்கள் ஏராளமானோர் திரண்டுள்ளனர். அப்போது கிணற்றின் சுவர் இடிந்து வீழ்ந்துள்ளது. இதன்போது அங்கிருந்த 40இற்கும் மேற்பட்டோர் கிணற்றுக்குள் வீழ்ந்துள்ளனர். இதுகுறித்து தகவல் அறிந்ததும் காவல்துறையினரும் தீயணைப்புத்துறையினரும் விரைந்து சென்று மீட்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டனர்.

அதன்படி கிணற்றிலிருந்து காயமடைந்த நிலையில் பலர் மீட்கப்பட்டதாகவும், 3 பேர் பரிதாபமாக உயிரிழந்ததாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன. மேலும் கிணற்றுக்குள் சிக்கியியுள்ள 20இற்கும் மேற்பட்டோரை மீட்கும் பணிகள் தீவிரமாக நடைபெற்று வருகின்றன. காயங்களுடன் மீட்கப்பட்டவர்கள் உடனடியாக மருத்துவமனைக்கு கொண்டுசெல்லப்பட்டு சிகிச்சையளிக்கப்பட்டு வருகிறது.

இந்தச் சம்பவம் அப்பகுதியில் பெரும் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது. மேலும் சிலர் கிணற்றில் மூழ்கியிருக்கலாம் என்று கருதப்படுவதால் உயிரிழப்பு எண்ணிக்கை மேலும் அதிகரிக்கக்கூடும் என அஞ்சப்படுகிறது.




Printed by the Kalukodayawa, Malwana Press & Published by Liberty Publishers (Pvt.) Ltd. 91, Wijerama Mawatha, Colombo 7